

# University of Jaffna

Dr.Arunasalam Somasundarampillai
Memorial Lecture-2023

## Culturally Formed Trade and Trade Practices of Tamils : A Study Based on the Sangam Literature

by

**Prof.S.Sivesan**
Professor in Marketing, Department of Marketing,
Faculty of Management Studies and Commerce.

**Thursday, 4th May 2023 at 3.00 p.m**
**Kailasapathy Auditorium,University of Jaffna.**



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலாநிதி அருணாச்சலம் சோமசுந்தரம்பிள்ளை

நினைவுப்பேருரை - 2023

## பண்பாட்டியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தமிழர்களின் வணிகமும், வணிக நடைமுறைகளும், சங்க இலக்கியங்களின் வழி - ஓர் ஆய்வு

வழங்குபவர் :-


**பேராசிரியர் சி. சிவேசன்**

**சந்தைப்படுத்தல் துறை, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம்,**


கைலாசபதி கலையரங்கு,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## Message from the Vice Chancellor

Late Dr.Arunasalam Somasundarampillai was a Chartered Accountant and a former member of the Governing Council of the University of Jaffna. I have known him for well our four decades in Point Pedro, his place of birth and residence, Thunnalai where he married (nee) Leela Kulaveerasingham and in Jaffna town where he set up his own Audit firm and administered the Merchant Finance Ltd.

After completing his secondary education at Hartley College in 1954 he enrolled in a professional accounting course in Colombo. He served as the Chief Accountant at Ceylon Printers (Ltd) after successfully completing his Chartered Accountancy programme. He established his own office in Jaffna and worked as a Tax and Audit Consultant while also serving as a Managing Director of Merchant Finance Ltd. For many years, he was a visiting lecturer in auditing at Department of Commerce, University of Jaffna. During this period, he was elected to the University Governing Council to serve as a member of the Council.

Dr.Somasundarampillai was the Charter President in the Lion Club of Point Pedro and the Chairman of Lions Club International Zone. He was also a supporter of a variety of social trusts and humanitarian organizations. He donated a significant portion of his money to such worthwhile initiatives.

The degree of Doctor of Philosophy, Honoris Causa, was awarded by the University of Jaffna to him as an appreciation of his many achievements in his profession and his commitment to University administration in 2004.

University of Jaffna is proud to have Prof.Sivesan Sivanandamoorthy, Professor in Marketing and Lead Coordinator of the Tourism and Hospitality management degree programme of the Faculty of Management Studies and Commerce as the distinguished orator of this memorial oration commemorating a respected Chartered Accountant and former Council Member Dr.Somasundarampillai. Professor Sivesan hails from a philanthropic respected family associated with Somaskanda Sivan Temple of Puttur. He is a committed young Professor aspiring to grow and deliver best of things to knowledge fraternity of Marketing and Tourism and Hospitality. He extends his expertise to Northern Provincial Council, Jaffna Co-operative society and the Ministry of Industries and related affairs in addition to the conventional duties at the University.

I thank Prof. Sivesan Sivanandamoorthy for agreeing to deliver the late Dr.Arunasalam Somasundarampillai memorial oration for the year 2023 on the title "Culturally Formed Trade and Trade Practices of Tamils: A Study Based on the Sangam Literature". In this oration Professor Sivesan shall explore and elucidate the connectivity of the culturally formed Trade and Trade Practices of the ancient Tamils and how it is interrelated with Tamil culture. Once again, I thank Prof.Sivesan Sivanandamoorthy for accepting our invitation and delivering this memorial oration-2023.

*All glories to Almighty.*

***Professor Sivakolundu Srisatkunarajah,***
***Professor in Mathematics,***
***Vice Chancellor,***
***University of Jaffna.***

# கலாநிதி அருணாச்சலம் சோமசுந்தரம்பிள்ளை நினைவுப் பேருரை - 2023

மதிப்பிற்குரிய வேந்தர் அவர்களே, துணைவேந்தர் அவர்களே, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடப் பீடாதிபதி அவர்களே, ஏனைய பீடாதிபதிகளே, பதிவாளர் அவர்களே, கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையின் உதவிப் பதிவாளர் அவர்களே, பேராசிரியர்களே, பேரவை மற்றும் மூதவை உறுப்பினர்களே, சக ஆசிரியர்களே, விருந்தினர்களே, மாணவர்களே, நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம்.

நினைவுப் பேருரையைத் தொடங்க முன்னர் நினைவுப் பேருரையின் நாயகன் பற்றி சில பகிர்வுகள்:

மானிட வாழ்வில் ஜனனத்துக்கும் மரணத்துக்கும் இடைப்பட்ட வாழ்வியலில் செயற்கரிய செயல்களினைச் செய்தவர்களினை ஆதர்சபுருசர்களாக சமூகத்தினர் ஏற்றுக் கொள்வார்கள். கொண்டாடப்படுவார்கள். அந்த வகையில் கலாநிதி அருணாச்சலம் சோமசுந்தரம்பிள்ளை நினைவு கூரப்பட வேண்டியவரே.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.**

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைவாக தனது தனிப்பட்ட வாழ்க்கைப் பாதையினை வடிவமைத்ததன் மூலமாய் உயர் மதிப்பைப் பெறுகின்றார். எமது கதாநாயகர் இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் ஈழவள நாட்டின் மகுடமாம் யாழ்ப்பாணத்தில் வீரத்துக்கும், விவேகத்துக்கும் புகழ்பெற்ற வடக்கில் துன்னாலை என்னும் பதியில் காலம் சென்ற திரு. திருமதி அருணாச்சலம் தம்பதிகளுக்கு புதல்வராகப் பிறந்தார் கலாநிதி. சோமசுந்தரம்பிள்ளை. இவர் தனது ஆரம்ப காலக் கல்வியினை பருத்தித்துறை தட்டாதெரு மெதடிஸ் பாடசாலையிலும் (Thattatheru Methodist Mission School) தனது இடைநிலைக்கல்வியினை தற்போது வேலாயுதம் மத்திய மகாவித்தியாலயம் (Velautham Mathiya Makavidyalayam) என அழைக்கப்படும் முன்னாள் புலோலி வேலாயுதம் பாடசாலையிலும் கற்றார்.

தனது உயர் பட்டப்படிப்பினை உலகமே வியந்து பார்க்கின்ற அறிஞர்களான A.P.J அப்துல்கலாம், பிரபலமான எழுத்தாளர் சுஜாதா (ரங்கராஜன்) மற்றும் சாண்டிலியன் போன்றவர்கள் கல்விகற்ற திருச்சி சென்ஜோசப் கல்லூரியில் (St.Joseph's College) தனது பொருளியலில் இளம் கலைமாணிப் படிப்பினை 1943ஆம் ஆண்டில் ஆரம்பித்தார். 1947ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். இவருடைய பல்கலைக்கழக வாழ்க்கையில் இவரது திறமையின் நிமிர்த்தம் அதாவது சொல் வன்மைக்கும், கடின முயற்சிக்கும் மகுடமாக சிறீனிவாசசாஸ்திரி ஞாபகார்த்த தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக் கொண்டார். கலாநிதி. சோமசுந்தரம்பிள்ளையின் தந்தையர் அருணாச்சலம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் (Hartley College) ஆசிரியராக கடமை புரிந்தார்.

சோமசுந்தரம்பிள்ளையின் குடும்பத்தின் கல்வி நீட்ச்சியானது இவருடன் மாத்திரம் என்றவாறாக நின்றுவிட வில்லை. இவருடைய சகோதரியான திருமதி.ம.தியாகராஜா தமிழ் மொழியில் கலாநிதிப் பட்டத்தினை இலண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்று இலங்கையில் புகழ்பூத்த கொழும்பு மற்றும் களனிப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். மேலும் இவருடைய சகோதரர்களில் ஒருவர் சிறந்த இயந்திரியாகவும் மற்றையவர் பிரபல்யமான குழந்தை மருத்துவ நிபுணர் ஆகவும் பணியாற்றினார். பணியாற்றிக் கொண்டிருந்த காலகட்டத்தில் புத்தி ஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள் உழைப்பதற்கு இது உகந்த பாதுகாப்பான நாடு அல்ல என நினைத்து விதேசமே சரணாகதி என்று எண்ணி நாட்டைவிட்டு பலர் ஓடிய போதும் போர் விமானங்களின் இரைச்சலினாலும், மரணத்தின் அவல ஒலியினாலும் அதிர்ந்த அன்றைய யாழ்ப்பாணத்தில் சுதேச மக்களுக்காக வைத்திய சேவை வழங்கிக் கொண்டிருந்த வேளையில் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் அகால மரணத்தைத் தழுவினார்.

கலாநிதி. சோமசுந்தரம்பிள்ளை தனது பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்த பின்னர். 1948ஆம் ஆண்டு ஹாட்லிக் கல்லூரியில் (Hartley College) ஆசிரியராகத் தொழில் வாழ்க்கையினை ஆரம்பித்தார். இவருடைய இளமையும், விவேகமும், இலகுவாக மாணவர்களினை அணுகுவதற்கும், அவர்களின் கவன ஈர்ப்பினைப் பெறுவதற்கும் பெரிதும் உதவியது. இத்தகைய நிலை பேணலால் எல்லோரது நன்மதிப்பினையும் பெற்று விளங்கினார்.

கலாநிதி. சோமசுந்தரம்பிள்ளையின் பணி வகுப்பறைக் கல்வியோடு மட்டும் நின்று விடாது கடல் கடந்து பெற்ற அனுபவத்தின் வாயிலாக பல்வேறு துறைகளில் அவர் பெற்றுக் கொண்டபேற்றினை மாணவர்களுக்கு வழங்கினார். மேலும் இவர் ஓர் சிறந்த பூப்பந்து (Tennis) விளையாட்டு வீரர். மாணவர்களுக்கு ஆர்வமாக பூப்பந்து விளையாட்டினையும் மேலும் பல துறைசார் விளையாட்டுக்களினையும் கற்றுக் கொடுத்தார்.

ஆறு வருடங்கள் ஹாட்லிக் கல்லூரியில் கற்பித்த இவர் தனது கற்கை முயற்சியின் பயனாக 1958ஆம் ஆண்டு முதல் தனக்கு மிகவும் பிடித்தமான கணக்கியல் துறையில் தனித்துவமானவராகவும், தன்னிகர் அற்றவராகவும் விளங்கி பட்டய கணக்காளரானார். 1958 - 1968ஆம் அண்டு வரை Ceylon Printers Ltd இல் பிரதான கணக்காளராகப் பணிபுரிந்தார். மேலும் பல்வேறுபட்ட நிறுவனங்களில் இணைந்து தனது நிபுணத்துவத்தினை பகிர்ந்து கொண்டதுடன், 1982ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் Merchant Finance Ltd என்கிற ஸ்தாபனத்தினை ஆரம்பித்து நிர்வாக இயக்குனராகவும், தலைவராகவும் பணிபுரிந்தார். கலாநிதி.சோமசுந்தரம்பிள்ளை தனது அறிவினையும், அனுபவத்தையும், ஏனையவர்களுடன் பகிர வேண்டும் என்கிற வேட்கையின் விளைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட பல்வேறுபட்ட உயர் கல்வி நிறுவனங்களில் வருகை விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

கலாநிதி. சோமசுந்தரம்பிள்ளை சமூகத்தின் மீது கொண்ட அக்கறையின் மூலம் பல்வேறு சமூகமட்ட நிறுவனங்களில் இணைந்து சமூக அபிவிருத்திக்கு பங்களிப்பினைச் செய்தார். 1982ஆம் அண்டு முதல் 2002ஆம்ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக இருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் ஓர் அடையாளமாக விளங்கிய இரு மாபெரும் மேதைகளான பேராசிரியர்.சு.வித்தியானந்தன் மற்றும் பேராசிரியர். அ.துரைராஜா போன்றவர்கள் துணைவேந்தராக பதவிவகித்த போது இப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் உறுப்பினராக இருந்தார். பின்னர் 1995/96ம் ஆண்டு யாழ்ப்பாண சமூகத்தினருக்கு ஏற்பட்ட பெரிய இழப்பிற்கும், இடப்பெயர்வுக்கும் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினைக் கட்டியெழுப்புவதற்கு துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையுடன் இணைந்து பல்வேறு வகையான சேவையினை ஆற்றினார்.

இவையாவற்றுக்கும் மகுடமாய் தமிழ் பேசும் தேசத்தின் பொருளாதார சுபீட்சத்திற்கு முதுகெலும்பாய் விளங்கும் கால் நடை வளர்ப்பு, மீன் வளம், மீன் வளர்ப்பு, மேம்பட, "இலங்கை மீன் வளமும் அதன் பயன்பாடும்", "இலங்கை தமிழ் பிரதேசங்களில் கால்நடை அபிவிருத்தி" என்ற இரு நூல்களினை யார்த்து வழங்கினார். சேவைகளால் நினைவு கூரத்தக்க பெருந்தகை இவர். எதிர்கால சமூகத்தின் நினைவுக்காக, பகிர்வு செய்யப்பட வேண்டிய செயலர் இவர்.

# பண்பாட்டியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தமிழர்களின் வணிகமும், வணிக நடைமுறைகளும், சங்க இலக்கியங்களின் வழி - ஓர் ஆய்வு

## 1. அறிமுகம்

தமிழ் என்பது ஒரு பிரதேசத்தின் அல்லது ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்கள் கூட்டத்தினால் பேசப்படுகின்ற ஒரு மொழி மட்டுமல்ல, மேலுமாய் இன, மத, வேறுபாடுகள் இன்றி அறிஞர்களினாலும், சான்றோர்களினாலும் அறிவியலின் மொழியாக, தொன்மையான நாகரிகத்தின் தோற்றுவாயின் அங்கமாக, பக்தியின் மொழியாக, ஓர் இனத்தின் அடையாளமாக கொண்டாடப்படுகின்ற மொழியே தமிழ்மொழியாகும். இது உலகில் மிக தொன்மையானதும், செழுமையானதுமான நாகரிகத்தினையும் பண்பாட்டையும் கொண்ட தமிழ் இனத்தினால் பயன்படுத்தப்படுவதன் காரணமாக தமிழ் இன்றும் நிலைபெற்றுள்ளது. “சிந்து வெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்” என்னும் நூலில் தமிழ் இனத்தின் தோற்றமும், எழுச்சியும் பற்றிய பெரும்பாலான ஆய்வுகள் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புபடுத்துவதனை அவதானிக்கலாம். மேலும் சிந்துவெளி நாகரிகத்தின் நீட்ச்சியே சங்க காலம் எனவும் குறிப்பிட்டுள்ளார் (பாலகிருஷ்ணன், 2020). சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட கீழடி ஆய்வுகள் தமிழ் இனத்தின் தொன்மையினை கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதைப் புலப்படுத்துகின்றது.

இற்றைக்கு 2500ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தின் பாயிரத்தில் பனம்பாரனார் என்ற புலவர் “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்உலகம்” என்று கூறுவதன் வாயிலாக தமிழ் இனம் வாழ்ந்த நிலப்பரப்பினை புவியியல் ரீதியாக வரையறுக்கமுற்பட்ட போதும். பிற சில தமிழ் இலக்கியங்களில் வடவேங்கடம் தென்குமரி என்பதனை புவியியல் ரீதியான எல்லை எது என நிர்ணயிப்பதில் மாறுபட்ட தன்மை காணப்படுவதனை அவதானிக்கலாம். (பாலகிருஷ்ணன், 2020). ஆனால் இன்று தமிழன் பாதம்படாத இடம் பாரில் உண்டோ என்று கூறி வியக்கும் அளவுக்கு தமிழர் உலகம் எங்கும் வியாபித்து இருக்கின்றார்கள் என்பது இங்கு எண்ணற்பாலது.

தமிழ்மொழியில் காணப்படுகின்ற இலக்கியங்களே தமிழ் மொழியின் சிறப்புக்கும், தமிழ் பண்பாட்டின் செழிப்புக்கும், செழுமைக்கும் அடிப்படையானதாகவும் வலு சேர்ப்பதாகவும் அமைந்துள்ளன. பண்டைய தமிழ் இலக்கியங்களில், வாழ்வியல் முறைகள் கலைகள், சமய சமூக விழுமியங்கள், நம்பிக்கைகள், அறக்கருத்துக்கள், காதல், வீரம், காமம், அறிவியல், அரசியல், புவியியல், பொருளியல், அரச கட்டமைப்புக்கள், சமூக கட்டமைப்புகள், மனையியல், வானியல், சாத்திரங்கள், மேலும் அன்பு, அருள், வாய்மை, ஈகை, தூய்மை, போன்ற எண்ணக்கருக்கள் பற்றி மிகவும் ஆழமாகவும், அழகாகவும், உணர்வு பூர்வமாகவும் கூறப்பட்டுள்ளன. இவ் படைப்புக்கள் உருவாக்கிய காலங்களில் இடம் பெற்றிருந்த பண்பாட்டு மேம்பாடுகளை வெளி உலகுக்கு இன்று வரை வெளிக் காட்டி வருகின்றன.

தமிழினை மொழியாக நோக்காது ஒரு உயிருள்ள உயிரியாகவே நான் நோக்குகின்றேன். ஏன் எனில் தமிழ் உணர்ச்சி மிக்கதும், ஊக்கப்படுத்தும் தன்மை கொண்டதுமாகும். மேலும் விசித்திரமானதும் ஆகும். மேலுமாய் உணர்வுபூர்வமானதும், நிலையான இயக்கங்களினைக் கொண்டுள்ளதும் என்பதனால் தமிழ் ஒரு சுயசரிதைக்கு தகுதியானது என்கிறார் டானியல் எனும் அறிஞர். மேலும் தட்சிணாமூர்த்தி என்னும் அறிஞர் 'தமிழர் நாகரிகமும் பண்பாடும் எனும் நூலில் ஓர் இனத்தின் பண்பாடு என்பதனை அதன் இலக்கியம், மக்களின் நடத்தை, மொழி, கலைகள், சமயக் கொள்கைகள், குறிக்கோள்கள்,பொருளாதார மற்றும் அரசியற் கொள்கைகள், பொருளாதாரக் கட்டமைப்புகள், வணிகமும், வணிகக் கட்டமைப்பும், அரசியல் வரலாறு, சமுதாய நிலைகள், சமுதாயத்தில் பெண்களின் நிலை, அறிவியல் சிறப்பு, கல்வி நிலையங்கள் போன்றவற்றின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும் என்று குறிப்பிடுகின்றார் (தட்சிணாமூர்த்தி, 2021).

இவ் நினைவுப் பேருரையின் நோக்கம் பண்டை தமிழனின் வணிகமும், வணிக நடைமுறைகளும் எவ்வாறு தமிழ்ப் பண்பாட்டுடன் இணைந்து வெளிவருகின்றது என்பதனை ஆய்வு செய்தல் ஆகும். கருப்பொருள் விபரணம் என்கின்ற முறையியலைப் பயன்படுத்தி இவ் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ் நினைவுப் பேருரையில்,

2. தமிழ்ப்பண்பாட்டுடன் இணைந்தவாறாய் தமிழனின் வணிகமும் வணிக நடை முறைகளும் வளர்ந்தவிதம்,

3. பண்டைக் கால தமிழர் வணிகம்,

4. சங்க இலக்கியங்களை, எடுத்துக் கூறி,

5. சங்க இலக்கியங்களில் வணிகம் குறித்து பின்வரும் படிமுறையில் விவரணப்படுத்தி உரையினை நிறைவுசெய்யலாம் என விளைகிறேன் :-

i. பண்டமாற்று முறைமை,
ii. உள்நாட்டு வணிகம்,
iii. கப்பல் வணிகம்,
iv. வரிமுறைமை,
v. அடிப்படை வணிகக் கட்டமைப்பு

6. நிறைவுரை

என்றவாறாக இவ் நினைவுப்பேருரை முழுமை அடைகிறது.

## 2. தமிழர் பண்பாடு

### 2.1 பண்பாடு என்னும் எண்ணக்கரு

கடந்த சில சகாப்தங்களாக 'சமூக விஞ்ஞானத்தில்' பல்வேறு துறைகளில் முன்னேற்றகரமான ஆய்வுகள் இடம்பெற்றிருந்த போதிலும் சமூக விஞ்ஞானத்திற்கு மூலமான அல்லது விளைநிலமான பண்பாடு குறித்த ஆய்வுகளில் குறைந்தளவிலான கல்வியியலாளர்களே தங்களது பங்களிப்பினை வழங்கினர். மேலும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அறிவுப்புலத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக புதிய கோட்பாடுகளும் பண்பாட்டியல் சிந்தனைகளும் ஆய்வின் வெளியீடுகளாக அமைந்திருந்த போதும் பண்பாடு, மரபுரிமை குறித்த நோக்கங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன (Kottak, 2008). சமூகவியலாளரான கீசிங் (Keesing) பண்பாட்டை சுயாதிபத்தியத்தின் தேர்வாக இனங்கண்ட பொழுதும் அது குறித்த ஆழமான, கருத்தியல் ரீதியான ஆய்வுக்குட்படுத்தத் தவறிவிட்டார். பண்பாடு குறித்த அறிவியல் பார்வையினை முன்னோக்கி நகர்ந்ததின் 1870களில் மத்யூஸ் ஆனால்ட பண்பாடு என்கின்ற பதத்தினை அக்கால வாழ்வியல் சமூக மாறிகளுக்குகேற்ப விளக்கியுள்ளார். பண்பாடு குறித்த அறிவியலாளர்களின் பார்வையானது காலத்திற்கு காலம் மாறுபட்டாலும் அடிப்படையில் பண்பாடு என்பது 'பண்படு' என்ற சொல்லில் இருந்தே தோன்றியது என்பர் (சிவத்தம்பி, 2000). ஆங்கிலத்தில் culture

என்ற பதமானது இலத்தின் சொல்லாகிய நிலத்தைப் பண்படுத்துதல் என்ற பதத்திலிருந்து தோன்றியதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. "Culture" என்ற ஆங்கில சொல்லுக்கு ஆங்கில - தமிழ் சொற்களஞ்சியத்தில் முனைவர் அ.சிதம்பரநாதன் செட்டியார் 'பயிர்ச்செய்கை' மற்றும் 'பண்படுத்தல்' என்ற இரு பதங்களினைப் பயன்படுத்தியுள்ளார் (சிவேசன், 2017). "தமிழர் சால்பு" என்ற பேராசியார் சு. வித்தியானந்தனின் நூலில் தமிழில் பண்பாடு என்று விழிக்கும் பதத்துக்கு தமிழாய்ந்த மூத்த அறிஞர்களினால் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற மறுநாமங்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் (வித்தியானந்தன், 1954). மேலும் 1950 களில் சிதம்பரநாதன் செட்டியாரின் ஆக்கங்களின் வாயிலாக பண்பாடு என்ற பதமானது கலாசாரம் என்ற பதத்திற்கு பதிலாக பழக்கத்துக்கு வந்தது (சிவலிங்கராசா, 2009).

பண்பாட்டு மானிடயவியலின் ஆரம்ப கர்த்தாவான எட்வாட் பர்னட் டெய்லரின் தொன்மைப் பண்பாடு என்னும் நூலில் பண்பாட்டினை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார். பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவற்றையும் மனித சமூதாயத்தின் ஓர் அங்கத்தவராக இருந்து கற்கும் பிற திறமைகளையும், பழக்க வழக்கங்களினையும் அடக்கிய முழுமைத் தொகுதியாகும் என்கின்றார். பண்பாடு குறித்த இவ் வரைவிலக்கணம் தான் பண்பாடு குறித்த பல்வேறுபட்ட அறிஞர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு அடிப்படையானதாகக் காணப்பட்டதுடன் பிற்காலத்தில் பண்பாடு குறித்து உருவாக்கம் பெற்ற பெரும்பாலான கருத்தியல்களில் பிரதிபலிப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது (சிவலிங்கராஜா, 2014).

**2.2 தமிழர் பண்பாட்டினைப் புரிதல்**

ஓர் இனத்தின் அல்லது மக்கள் தொகுதியின் பண்பாடு எப்போதும் தனித்துவமானதாய் அமைந்திருக்கும் என்பதற்கு தமிழர் பண்பாடு மட்டும் விதிவிலக்கல்ல. இற்றைக்கு 2500 ஆம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியமானது தமிழ் மொழிக்கான இலக்கணத்தை செவ்வனே இயம்புகிறது. தமிழர் பண்பாட்டின் தோற்றத்தின் காலம் பல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவானது. தமிழர் பண்பாடு என்பது தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவருக்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றது. தமிழர் பண்பாட்டின் சிறப்புத்தன்மை எதுவெனில் தமிழ்

மொழியைப் பேசுகின்ற வேறுபட்ட இனம், மதம் கடந்த மக்கட் கூட்டத்தின் சமூகப் பொருளாதார நடத்தையினை அழுத்திக் கூறுவதாய் அமைந்துள்ள போதும். ஆனால் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் போன்ற கீழைத்தேய நாடுகளில் சமய நடைமுறைகளே சமூக வாழ்வியல் பண்பாட்டு நடத்தையில் அதிக செல்வாக்கு செலுத்துபவையாக அல்லது பண்பாட்டுக் கோலங்களை உருவாக்குவனவாக இருக்கின்றது (சிவலிங்கராசா, 2009, நித்தியானந்தன் 2002)

பேராசிரியர். சிவத்தம்பியின் 'தமிழ்ச் சமூகமும் பண்பாட்டின் மீள் கண்டுபிடிப்பும்' என்னும் நூலில் தமிழர் பண்பாட்டினைப் பற்றிக் கூறும்போது பண்பாடு என்பதனை பின்வருமாறு குறிப்பிடுகின்றார். பண்பாடென்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் போன்றனவற்றின் தொகுதியேயாகும் (சிவத்தம்பி, 1994, ப.5). பண்பாட்டிற்குரிய வரைவிலக்கணத்தின் வழியாக ஆதி மனிதன் முதல் நவீனகால மனிதன் வரையிலாய் மானிடத்தின் பரிணாம வளர்ச்சியில் ஏற்பட்ட படி நிலை வளர்ச்சிக்கும் பண்பாட்டிற்குமிடையில் அழுத்தமான, திருத்தமான, நம்பிக்கையான ஓர் உறவு நிலையுள்ளதை உணர்ந்து கொள்ளக்கூடியதாயுள்ளது. சிவத்தம்பியின் இக்கருத்தியலாக்கத்தின் ஊடாக பண்பாடு என்பதனை சமூக, சமய விழுமியங்களுக்குள் மட்டும் அடக்காது அதற்கும் அப்பாலாய் மானிடவியல் முன்னேற்றத்திற்கு பொருளாதார, உற்பத்தி வளர்ச்சி முறமைகளை அடிப்படையாக் கொண்டதுமான ஓர் தொகுதியாகவும் நோக்கப்படுகின்றது.

தமிழரின் பண்பாட்டு அம்சங்களில் மிக உயரியதும் மனித வாழ்வோடு இணைந்ததும், இசைந்ததுமானதாக விருந்தோம்பல் காணப்படுகின்றது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் விருந்தோம்பல்களையும் விருந்தோம்பலின் சிறப்பினையும் குறிப்பிடத் தவறவில்லை. தமிழ் வளர்ச்சிப் போக்கில் வந்த சீவகசிந்தாமணியில்:

> **"ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசரித்து உண்மைபேசி**
> **உப்பில்லாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தமாகும்**
> **முப்படியொடு பால அன்னம் முகம் கருத்து இடுவதாயின்**
> **கப்பில பசியினோடு கடும் பசி ஆகுந்தானே".**

விருந்தோம்பலானது முக மலர்ச்சியுடனும் மெல்லிய புன்னகையுடனும் உளப்பூர்வமாக அதாவது அகமும் உதடும் ஒருமித்து வரவேற்று விருந்து பரிமாற வேண்டும். அவ்வாறு நிகழாத சந்தர்பர்த்தில் முகர்ந்து பார்க்கையில் வாடிவிடும் அனிச்ச மலரைப் போல் விருந்து கெட்டுவிடும். விருந்தோம்பல் என்பது தமிழர்களினால் போற்றிக் கொண்டாடப்படுகின்ற ஒரு கலையாகும். பண்டைத் தமிழன் வாழ்வியலில் விருந்தோம்பலான ஊடல் கொண்டிருந்த கணவன் மனைவிக்கு இடையே சுமூகமான உறவினை ஏற்படுத்திக் கொள்ள உதவும் ஒரு செயற்பாடாகவும் கண்டுகொள்ளப்படுகிறது. நற்றிணையில்

**.....................................அறிவை**
**எமக்கே வருகதில் விருந்தே சிவப்பு ஆன்று**
**சிறியமுள் எயிலு தோன்ற**
**முறுவல் கொண்ட முகங்காண கம்மே (நற் - 120)**

விருந்தினர் மனை நோக்கி வரும்போது மனையாள் தான் கொண்ட ஊடல் மறந்து விருந்தினர் முன்னே கணவனை அவமதியாது புன்னகையுடன் அன்னமிட்டு மகிழ்வாள். இத்தகைய செயற்பாட்டினால் முன் பகை மறந்து பணிவுடன் நடக்கும் உயரிய பண்பு தமிழர் சால்பின் அடிநாதமாகும். அன்பும், ஏனையோர் மீது அக்கறை கொள்ளுதலும் விருந்தோம்பலின் பிரதான அம்சம் ஆகும். ஆறு அறிவு கொண்ட மனிதர்களுக்கு விருந்தளித்து மகிழ்வது போல் விலங்குகளுக்கும் உணவு வழங்கிப் பூரிப்பு அடைந்தனர். மேலும் பரிபாடலில் இந்த உயரிய மன் உயிர் ஓம்பும் விழுமியம் அழகாகக் கூறப்பட்டுள்ளது:

**மலிவுடை உள்ளத்தான் வந்துசெய் வேள்வியுள்,**
**பல்மணம் மன்னு பின்இருங் கூந்தலர்,**
**கன்னிமை கனிந்த காலத் தார், நின்**
**கொடிஏற்று வாரணம் கொள்கவழ மிச்சில் (பரி:19, 89 -91)**

இப்பாடலின் வழியாக கன்னிப் பெண்கள் தமக்கு நல் வாழ்கை துணையாளன் கிடைக்க வேண்டும் என கடவுளிடம் வேண்டி கடவுளுக்கு காணிக்கையாக படைத்தது பின் அப் படையலை கோவில்யானைக்கு மீளப் படைப்புச் செய்து மீதியாக வருவதைச் சங்க காலத்துப் பாவையார்கள் உண்பர் என பரிபாடல் கூறு கின்றது.

தமிழன் என்றுமே அகன்ற விசாலமான சிந்தனை ஓட்டத்துடன் வாழ்ந்தான் என்பதனை தொன்மை இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிந்து

கொள்ளலாம். சமகால உலகில் பேசு பொருளாக மாறியுள்ள உலக மயமாக்கல் என்ற கோட்பாட்டினை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கணியன் பூங்குன்றனார் எடுத்தியம்பியுள்ளார்:

**யாதும் ஊரே யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா** (புறம்:192, 1-2)

பரந்த பாரில் உள்ள எல்லாம் யாவருக்கும் பொதுவானது. ஊர் எதுவாயினும் எல்லோருக்கும் உரியதே. எவராயினும் எல்லோரும் எம் உறவினரே. நன்மையும் தீமையும் பிறரினால் ஏற்படுத்தப்படுவது அல்ல. ஒவ்வொருவரது செயல்களின் விளைவாகத்தான் நன்மையும் தீமையும் ஏற்படுகின்றது என்கிற உயரிய தமிழர் தத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்துகிறது. மேலும் இப்பாடல் வழி தத்துவ ரீதியாக தொன்மை தமிழனின் தாராள சிந்தனை ஒட்டத்தினையும் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பாற் சென்று எல்லோரையும் சமமாக நோக்குகின்ற தமிழர் வாழ்வியல் முறையினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. ஆண்டவன் முதல் ஆண்டி வரை சமமாக நோக்கி அணுகுகின்ற முறை தமிழர்களிடம் இருந்தது. இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக 19ம் நூற்றாண்டில் சிக்காக்கோவில் சுவாமி விவேகானந்தர் உரையற்றிய போது "எனது அமெரிக்க சகோதர, சகோதரிகளே" என்று பேச்சினை ஆரம்பித்தார். இவ் அறைகூவல் கூட தென் இந்தியா பண்பாட்டின் ஓர் நெருடலாகக் கூட அமைந்திருக்கலாம் வண பிதா தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டுள்ளார். மேலும் அடிகளார் தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் என்கின்ற தலையங்கத்தில் ஆற்றிய நினைவுச் சொற்பொழிவு ஒன்றில் பின்வருமாறும் குறிப்பிட்டிருந்தார். இத்தாலி நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக் (Stoic) மெய்யியல் வாதிகள் உரோமப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலக மனப்பான்மையை வளர்த்தார்களோ அதுபோன்றே சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ்நாட்டில் பரவியிருந்தது என்றார்.

சகிப்புத்தன்மை, எதனையும் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு எடுக்கும் இயல்பு ஆதித் தமிழனிடம் காணப்பெற்ற உயர்ந்த பண்புகளாகும். அச்சமயம் புதிய நல்ல பயன் தரும் சிந்தனைகளினை ஏற்றுக் கொள்ளுதல், அதன்படி நடத்தல், நடை முறைக்கு ஒவ்வாத சிந்தனைகளிலிருந்து வெளியே வருதல் தமிழரின் அற்புதமான குண இயல்புகள் ஆகும். இதற்கு சான்று பகிர்வது போன்று பவுணந்தியாரால் நன்னூலில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவரையினாலே" என்று கூறப்பட்டுள்ளது. இச் சூத்திரமானது தமிழர்

சிந்தனை மரபின் பரிணாம வளர்ச்சியினையும், அதன் திறன் விளைவுகளையும் இவ் சூத்திரவடிவு மிகத் தெளிவாக சித்தரிக்கின்றது.

சமகாலத்தில் உலகியல் மாறுதல்களுக்கு ஏற்ப புதிய எண்ணங்களினை தன்பால் உள்வாங்கி பொருத்தமான கருத்தியலுக்கும், எண்ண ஓட்டங்களுக்கும் ஊடாக பல் பரிமாணம் கொண்டு வளர்ச்சியடைந்துள்ள நவீன வர்த்தக, பொருளாதார, சமூக கட்டமைப்பினைக் கையாளுகையில் தமிழ்ர்தம் அடிப்படை பண்பாட்டில் மாறுதல்கள் இன்றி முன்னெடுக்கப்படும் தமிழர் வாழ்வியலை அவதானிக்கலாம். பண்டைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் கருத்தினை அல்லது எண்ணங்களினை முன்வைப்பவனது மூலம்குறித்து முக்கியத்துவம் கொடுக்காது. மாறாக அவனது கருத்துக்களுக்கும், எண்ணங்களின் உருவாக்கங்களுக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பவனாய் காணப்பட்டான். இதனைச் சான்றுப்படுத்த தொன்மைக் கால தமிழர் வரலாற்று நிகழ்வுகளிருந்து சில எடுத்துக் காட்டுகளை இங்கு குறிப்பிடலாம். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி, நரிவிருத்தம் என்கிற நூல்களினை எழுதியவரான திருத்தக்க தேவரும், சிலப்பதிகாரம் என்னும் உன்னத காவியத்தை வடித்த இளங்கோ அடிகளும் அடிப்படையில் சமணர்கள். பொதுவாக சமண மதத்தவர்கள் மத கொள்கைகளின் நிமித்தம் அவர்கள் காவியங்களின் மீதும், கலைகள் மீதும் நாட்டமற்றவர்களாக இருந்த போதும், தமிழர் கலைகளினைக் குறித்து தமது படைப்புகளில் ஆழமாக விபரித்துள்ளனர். அது போன்று ஈழ வள நாட்டில் இனிய தமிழுக்கும், இந்து சமயத்துக்கும் அரிய பல பங்களிப்புகளினைச் செய்த ஆறுமுகநாவலர் விவிலியத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்த்தார். இவை முலம் தமிழரின் சகிப்புத்தன்மையையும், அண்டம் கடந்த மதம்கடந்த பூகோளமயமான பரந்த மனப்பான்மையினையும் கண்டு கொள்ள முடிகிறது.

தமிழர் பண்பாட்டில், திறமையினையும், திறமைசாலிகளையும் அங்கீகரித்து அரவணைத்து, அவர்களின் பங்களிப்புப் பெறுமதியினை கனம்பண்ணிக் கொண்டாடுவதில் தமிழ்ப் பண்பாட்டுக்கு நிகராக எந்த பண்பாட்டிலும் இடம்பெற்றிருக்கவில்லை. கிறிஸ்தவ மத போதனைக்காக இந்தியாவந்த ஐரோப்பியர்களான ரொபேட் கால்கு வெல் (ஐயா), வீரமாமுனி (கான்டன்டை ஜோசப் வெங்கி) மற்றும் போப்பையர் (ஜீ.யு.போப்) போன்றவர்களுக்கு தமிழ்க் காப்பியங்களில் கூறப்படும் காதலும், இனிமை மிக்க சமூக உறவுப் பிணைப்புகளும், மேலும் புறநானூறு சித்தரிக்கும் வீரமும், திருவாசகம் இயம்பும் இறை அன்பும், திருக்குறள் புகட்டிய நன்நெறியும்,

திருமந்திரம் கூறும் வாழ்வியலுக்கு உகந்த நடைமுறைச் சித்தாந்தங்களிலும் மனம் படிந்து மதம் போதிக்க வந்தவர்களினை மதம் கொண்டு தமிழ் இலக்கியங்கள் தமிழ் இலக்கணத்தினைக் கற்று தமிழுக்கு பணி செய்யவைத்தது. தமிழுக்கு தலைவணங்கவைத்தது. இதுதான் தமிழ்ப் பண்பாட்டின் மகிமையும் மாண்புமாகும்.

**3. பண்டை கால தமிழர் வணிகம்**

மானிடவியலாளர்களின் கருத்துப்படி வணிகத்தின் வளர்ச்சிக்கும் மானிட இனத்தின் பரிணாம வளர்ச்சிக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது என்கிறார் கோட்டாக் (Kottak, 2008). ஆதிமனிதன் வேட்டையாடியே தனது தேவைகளினைப் பூர்த்தி செய்தான். தனது தேவைக்கு மேலதிகமானவற்றினை பிறருக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து பதிலாகப் பொருட்களினைப் பெற்றுக்கொள்ளத் தொடங்கிய போது வணிகத்தின் அடிப்படையான பரிமாற்றம் என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது.

நாகரீகம் வளர்ச்சியடையாத காலத்தில் மனிதனுடைய தேவைகளும், அவற்றுக்கான தெரிவுகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில் மனிதன் பொருளாதார, உளவியல் ரீதியான தன்நிறைவு நிலையினைக் கொண்டிருந்தார்கள். காலப் போக்கில் நாகரிகம் வளர்ச்சியடைய, மக்களின் தேவைகளும் வளர்ச்சியடைந்தன. இதன் விளைவாக பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம் அடிப்படையானதாக மாறியது. இதன் முதற் படியாக "பண்டைமாற்று எண்ணக்கருவின்" தொழிற்பாடு தோற்றம்பெற்றது. ஆனால் கால ஓட்டத்தில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியும், நாகரீக வளர்ச்சியும் உற்பத்தியின் அளவிலும், இயலுமையிலும் பாரிய அளவு அதிகரிப்பினை ஏற்படுத்தியது. இதன் விளைவாக மேலதிகமான உற்பத்திகள் ஏற்பட்டன. மேலதிகமான உற்பத்திகளினை விற்பனை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் வாயிலாக 'வணிகம்' என்னும் துறை ஆரம்பித்தது. அன்று பொருட்களுக்குப் பதிலாக பொருட்கள் பரிமாற்றத்துடன் ஆரம்பமான வணிகம் இன்று இலத்திரனியல் தளங்களின் ஊடாக பல்வேறு தளங்களில் வணிக நடவடிக்கைகள் விரிந்து காணப்படுகின்றது (Murugesan, 2007).

ஹென்றி என்ற அறிஞர் 'பண்டைக்கால வர்த்தகத்தின் சுருக்கமான வரலாறு' என்னும் நூலில் பண்டைக்கால வணிகத்தின் வரலாறு பற்றிக் குறிப்பிடும் போது கி.மு. 3000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்திய

இராச்சியமானது செல்வச் செழிப்புடனும், நாகரிக மயப்படுத்தப்பட்டும் காணப்பட்டது என்றும். இதற்கான முதன்மைக் காரணம் அங்கு காணப்பட்ட விவசாயத்துக்கு உகந்த மண் வளத்தையும், ஏனைய செழிப்பான இயற்கை வளத்தையும் பயன்படுத்தி ஏற்றுமதி நோக்கிய அளவில் விவசாயத்தில் ஈடுபட்டனர். மேலதிகமானவற்றை அயல் நாடுகளான பாலஸ்தீனம், நுபியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததுடன், அந்த நாடுகளிடமிருந்து வாசனைத்திரவியங்களினை இறக்குமதியும் செய்து கொண்டனர் (ஹென்றி, 1998). அதேவேளை அசிரிய வணிகர்கள் அரபிக் மொழியினைப் பேசுபவர்கள். இவர்கள் வட ஈரான், வடமேற்கு ஈரான், தென்கிழக்கு, துருக்கி மற்றும் கிழக்கு சிரியா போன்ற பிரதேசத்தில் வாழ்ந்த பூர்விகக் குடிகள். இவர்கள் அக்காலத்தில் தமது வணிக செயற்பாடுகளினை பாபிலோன், பாலஸ்தீனம், இந்தியா போன்ற நாடுகளுடன் கொண்டிருந்தனர். இவ்வாறு விரிவடைந்த வணிகத் தொடர்புகள். கிரேக்க தேசத்தின் எழுச்சியுடனும், கிரேக்க நாட்டு மாவீரன் அலெக்சாந்தரின் பிற நாடுகளின் மீதான படையெடுப்புகளின் பின்னரே, பாரசீக நாட்டு வணிகம் வீழ்ச்சியடைந்தது. கி.மு 608 ஆம் ஆண்டளவில் எகிப்தியரும், பினிஷியர்களும், கடல் வழியாக, கூட்டாக ஆபிரிக்கா, அரேபியா, இந்தியா, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்புகளினை வைத்திருந்தனர். இந்நிலையில் இந்தியத் துணைக்கண்டத்தில் வணிகமானது சிறந்து விளங்கியது (தட்சிணாமூர்த்தி, 2021).

ஒரு தேசத்தின் செழுமை விவசாய அபிவிருத்தியிலும் வணிகத்தின் செழுமையிலுமே தங்கியுள்ளது. இதனை திருக்குறளில் நாடு என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர்:

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு** (திரு: 731)

குறையாத விளை பொருட்களினை உண்டாக்குபவர்களான உழவர்களும், கல்வி அறிவு நிறைந்த சான்றோரும், தாழ்விலாச் செல்வம் கொண்ட வணிகரும் சேர்ந்திருப்பதே சிறந்த நாடு என்கிறார். வள்ளுவர் வணிகர்களினை 'தாழ்விலாச் செல்வர்' என்றவாறாக மிக உயர்ந்த இடத்தில் வைத்து நோக்கினார். மேலும் அவர்கள் பொருளாதார ரீதியாக வலுப் பெற்றிருந்தால் நாட்டை ஆளும் வேந்தனுக்கு அடுத்து நோக்கப்பட்டனர்.

சங்க இலக்கியங்களில் வணிகர்கள் 'இளங்கோக்கள்' என்றும் அழைத்தனர் (பாலசுந்தரம், 2015). புலமையாளர்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களைச் சான்றாக்கி பின்வருமாறு குறிப்பிடுகின்றன. கரிகால்வளவன் காலத்தில் அரச குலத்தினைச் சேர்ந்த இளைஞர்களும் வாணிப குலத்தினைச் சேர்ந்த இளைஞர்களும் காவிரிப்பூம்பட்டின வீதிகளில் ஒன்றாகச் சேர்ந்து யானை, குதிரை சவாரிகள் செய்தனர். (அறவாணன், 1994). இதன் மூலமாக வணிகர்களும் அரசர்களும் சமத்துவத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்ந்தார்கள் என்பது புலப்படுகின்றது. வணிகர்கள் அவர்களின் உழைப்புக்குத் தக்கபடி பட்டங்களும், பொற்பூக்களாளும் வழங்கப் பெற்று அரசர்களினால் கௌரவிக்கப்பட்டனர். மேலும் சங்க காலத்தில் வணிகர்களினையும், வைத்தியர்களினையும் அதிகமாகப் போற்றியதுடன், இவ் இரு தொகுதியினரையும் சமமாக நோக்கினர் (அறவாணன், 1994). ஏன்எனில் வணிகர்களும் வைத்தியர்கள் போன்று தொழில்சார்பான அறத்துக்கு முதன்மை கொடுத்து அறவழி ஒழுகியே வாழ்ந்தார்கள் என மதுரைக் காஞ்சி போற்றுகிறது. பட்டினப்பாலை வணிகரைப்பற்றி:

**கொலை கடிந்தும், களவுநீக்கியும்,**
**அமரற்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,**
**நல்ஆனொடு பகடுஓம்பியும்,**
**நான்மறையோர் புகழ்பரப்பியும்,**
**பண்ணியம் அட்டியும், பசும்பதம் கொடுத்தும்,**
**புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை** (பட்: 199 - 205)

அரசர், அமைச்சர், சான்றோர் முதலானவர்கள் பின்பற்றும் அறங்களினை வணிகர்களும் பின்பற்றி புகார் நகரில் வாழ்ந்தனர். அதாவது வணிகர்கள் கொலை மற்றும் களவு போன்ற சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடாதவர்களாகவும், மேலும் புண்ணியங்கள் பல செய்தும் வாழ்ந்தனர் என்பதனைப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.

தொன்மைக்காலத்தில் வணிகர் இலாபம் பெறுகின்ற நோக்கினைக் காட்டிலும் "எல்லோரும் எல்லாம் பெற்று வாழவேண்டும்" என்கின்ற சமூக நோக்கிலேயே வணிகம் செய்தனர். ஏன் எனில், பல்வேறுபட்ட இடங்களில் விளைகின்ற பல்வேறுபட்ட பொருட்களை ஓர் இடத்துக்குக் கொண்டுவந்து அப்பண்டங்கள் கிடைக்கப் பெறாத இடங்களில் வாழ்கின்ற மக்களும் அவற்றைப் பெற்று தமது தேவைகளினைப் பூர்த்தி செய்ய வாய்ப்பாக

வணிகர்கள் செயற்பட்டனர். காவிரிப்பூம் பட்டனத்தில் வாழ்கின்ற வணிகர்கள் பொருட்களினை விற்பனை செய்யும் போது தமக்கு கிடைக்கும் இலாபத்தினை வெளிப்படையாகக் கூறியும், அவ்வேளை தம்முடைய பண்டங்களினை சரியான எடையிலும் விற்பனை செய்வதனை வழமையாகக் கொண்டிருந்தார்கள்.

வணிகர்கள் கண்ணியத்துடனும், நடுநிலையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்கள் என்பதனைப் பட்டினப்பாலையில் பின்வரும் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன:

**கொடுமேழி நசை உழவர்**
**நெடுநுகத்துப் பகல்போல,**
**நடுவுநின்ற நல்நெஞ்சினோர்,**
**வடுஅஞ்சி வாய்மொழிந்து,**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது,**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல்கொண்டித் துவன்றுஇருக்கைப்** (பட்: 205- 212)

பட்டினப்பாலையில் சங்ககால வணிகர் எத்தகைய பண்புகளினைக் கொண்டிருக்க வேண்டும் என முன் மொழியப்பட்ட பண்புகளைச் சமகாலத்தில் அடம்ஸ் மற்றும் கரெட்டி போன்றவர்கள், இன்றும் வணிகர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை என முன்வைக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகளுடன் ஒத்தனவாய் காணப்படுகின்றன. அவையாவன: வெளிப்படைத்தன்மை, சகிப்புத்தன்மை, நேர்மை, சமூகப் பொறுப்பு என்பவற்றினைக் குறிப்பிடலாம்.

**4. சங்க இலக்கியங்கள்**

பண்டைத் தமிழர்களின் வரலாற்றினைக் கட்டி எழுப்புவதில் சங்க இலக்கியங்களே அடிப்படையாக இருந்தது. சங்கத்துக்கு 'கூடல்'', 'சபை' எனவும் பொருள் கொள்ளலாம் (பாலசுந்தரம், 2015). தமிழ் ஆய்ந்த வல்லுனர்கள், அறிஞர்கள் பலர் கூடி ஆய்வு ரீதியாக முடிவினை எடுக்கும் இடத்தினைக் கூடல் என்று அழைப்பர். ஆதலால் தான் மாணிக்கவாசகப் பெருமான் "கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்" என்கிறார். நீதி நூல்களில் ஒன்றான நல்வழி முதல் வெண்பா வாயிலாக ஔவைப் பிராட்டி கடவுளிடம் இருந்து சங்கத் தமிழ் மூன்றும் தரும்படி வேண்டுகிறாள்:

**பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா. (நல்வழி: கடவுள் வாழ்த்து)**

சங்க காலத்தில் நடைமுறையிலிருந்த இசைத்தமிழ், இயல்த்தமிழ், மற்றும் நாடகத் தமிழ் என்ற மூன்று வகையான முத்தமிழ்களினையும் இறைவனிடம் யாசிக்கின்றாள். இதன் வழி சங்கத்தின் இருப்பினையும், சங்கத்தின் ஆளுமைப் பண்பினையும், தமிழ் வளர்ச்சியில் சங்கத்தின் ஆட்சியினையும் தர்க்க ரீதியாகப் புரிந்து கொள்ளலாம். ஈழத்தின் புகழ்பூர்த்த தமிழ் அறிஞர்களான பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி, தனிநாயகம் அடிகள் உட்பட இந்தியாவின் புலமையாளர்கள் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி, பேராசிரியர் மனோன்மணி சுந்தரம்பிள்ளை, மற்றும் கலாநிதி வரதராசன் போன்றவர்கள் தமிழர் வரலாற்றில் சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறைகளினை உள்ளதை உள்ளவாறு பிரதிபலிப்பாக உள்ளது என்று குறிப்பிடுகின்றனர் (பாலசுந்தரம், 2015: சுப்பிரமணியன், 2006). அதேவேளை பண்டைக் காலத்தில் சங்கம் என்று எதுவொன்றும் இருந்திருக்கவில்லை. அவை கற்பனையின் வழிதனில் தோன்றியவை என்றும் 'தமிழரின் வரலாறு' என்னும் நூலில் பிடி சீனிவாச ஐயங்கார் மற்றும் 'பழந்தமிழர் கால அட்டவணை' என்னும் நூலில் சிவராஜபிள்ளை போன்றோர்கள் சங்கம்மிருந்தனை நம்ப முடியவில்லை என்று அவை பிற்காலத்தில் எழுதி சேர்க்கப்பட்டவை என்றும் குறிப்பிடுகின்றார்கள் (பாலசுந்தரம், 2015). இவ்வாறான முரண்கருத்துக்கள் காணப்படினும் கீழடி, கொடுமணல், ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு போன்ற தொல்லியற் களங்களில் இடம்பெற்ற ஆய்வுகளின் வெளியீடுகள் ஆதித் தமிழன் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தான் என்பதையும். மேலும் சங்க இலக்கியங்கள் காட்டும் நாகரீகமானது நன்கு கட்டமைக்கப்பட்ட பண்டைய கிரேக்க உரோம நாகரிகத்துடன் ஒப்பிடும் அளவில் சிறப்பாக இருந்தது எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது (பாலகிருஷ்ணன், 2020).

சங்க காலத்தினை வரையறை செய்வது சற்றுக் கடினம் என்றாலும் சங்க இலக்கியங்கள் என்பதற்குள் எட்டுத்தொகை -நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு, பரிபாடல் மற்றும் பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை மலைபடுகடாம் உள்ளடக்கப்படுகின்றது.

| சங்க இலக்கியம் | புலவர்கள் | பாடல்கள் |
| --- | --- | --- |
| ஐங்குறுநூறு | கபிலர், அம்மூவாளர், ஓதலாந்தையார், பேயனார், ஓரம் போக்கியார் இவர்களினால் இயற்பட்ட பாடல்கொண்டு இதனைத் தொகுத்தவர் கடலூர்கிழார். | 500 |
| குறுந்தொகை | 205 சங்கப்புலவர்களால் இயற்றப்பட்ட பாட்டினைக் கொண்ட குறுந்தொகையினை தொகுத்தவர் பூரிக்கோ. | 401 |
| நற்றிணை | 192 புலவர்களினால் பாடப்பெற்ற பாடல்களினை உள்ளடக்கியுள்ளது. பாடல்களில் 234 வது பாடல் இல்லை | 400 |
| அகநானூறு | 144 புலவர்களினால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டு உருத்திரசன்மர் என்பவர் இதனை தொகுத்தார். | 400 |
| கலித்தொகை | பாலைபாடியபெருங்கடுங்கோ, கபிலர், மருதன் இளநாகனார், சோழன் நல்லுருத்திரன், நல்லந்துவனார் போன்றவர்களினால் இயற்றப்பட்ட பாடல்கள் நல்லந்துவனர் தொகுத்தார் | 150 |
| பதிற்றுப்பத்து | குமட்டூர் கண்ணனார், பாலைக் கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்கிழார், காக்கை பாடினியார் நச்செள்ளையார் இயற்றப்பட்ட பாடல்களினைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. | 90 |

| | | |
|---|---|---|
| புறநானூறு | 156 புலவர்களினால் இயற்றப்பட்டது. | 398 பாடல்கள் உள்ளன. 267 ஆம், 268 ஆம் பாடல்கள் தொகுப்பில் இல்லை |
| பரிபாடல் | ஆசிரியன் நல்லந்துவனார், இளம்பெருவழுதியார்,கடுவன் இளவெயினனார், கீரந்தையார், கரும்பிள்ளைப்பூதனார், கேசவனார், குன்றம் பூதனார், நல்லச்சுதனார், நல்லழுசியார், நல்லெழுதியார், நல்வழுதியார், மையோடக்கோவனார். | |
| திருமுருகாற்றுப்படை | நக்கீரனார் | 317 அடிகள் |
| பொருநர் ஆற்றுப்படை | முடித்தாமக் கண்ணியார் | 248 அடிகள் |
| சிறுபாண் ஆற்றுப்படை | இடைக்கழி நாட்டு நல்லூர் நந்தந்தனார் | 269 அடிகள் |
| பெரும்பாண் ஆற்றுப்படை | கடியலூர் உருத்திரங்கண்ணனார் | 500 அடிகள் |
| முல்லைப்பாட்டு | நப்புதனார் | 103 அடிகள் |
| மதுரைக்காஞ்சி | மாங்குடி மருதனார் | 782 அடிகள் |
| நெடுநல் வாடை | நக்கீரனார் | 188 அடிகள் |
| குறிஞ்சிப்பாட்டு | கபிலர் | 261 அடிகள் |
| பட்டினப்பாலை | கட்டியனூர் உருத்திரங்கண்ணனார் | 301 அடிகள் |
| மலைபடு கடாம் | செங்கண் மாத்துவோன் நன்னனசேய் | 584 அடிகள் |

சங்க இலக்கியங்கள் ஈழத்துப் பூதன்தேவனார் உட்பட 473 புலவர்களால் பாடப் பெற்ற மொத்தம் 26350 வரிகளைக் கொண்ட ஆகமொத்தம் 2381 பாடல்களினை உள்ளடக்கியவாறாய் 18 நூல்களுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கின்றன. ஔவையார் (அகம் - 04, புறம் - 32, குறு - 15, நற் - 07 பாடல்கள்), வெண்ணிக்குயரித்தியார் (புறம் -01 பாடல்) உட்பட 41 பெண்பால் புலவர்களும் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த சான்றோர்களுள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள் (பத்மநாதன், 2007). சங்க இலக்கியங்கள் வாயிலாக சமூக ரீதியிலான, பால் ரீதியிலான வேறுபாடுகள் இன்றிபாகுபாடுகள் இன்றி திறமையினை அங்கீகரிக்கின்ற பான்மை சங்க காலத்து சான்றோர்களிடமும், ஆன்றோர்களிடமும் நிறைவுபெற்றிருந்தது என்பது புலப்படுகின்றது.

சங்க இலக்கியங்கள் மத சார்பற்றவை என்கிறார் (சிவத்தம்பி, 2007). எனினும் சங்ககாலத்து நூல்களில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்றவை இறை இருப்புத்தன்மையினை முன்மொழிந்துள்ளன என்கின்ற கருத்தினை சோ. கிருஷ்ணராஜாவின் 2007ல் எழுதிய சங்ககால சமூகமும் சமய - மெய்யியற் சிந்தனைகளும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் “சங்க இலக்கியத்தில் வைணவம்” என்னும் கட்டுரையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சங்கப்பனுவல்களில் வைணவ சமயம் தொடர்பான பல கருத்துக்கள் இடம்பெற்றிருந்த போதிலும் பரிபாடலில் 25 சதவீதமான நெடும் பாடல்கள் வைணவ சமயத்தைச் சார்ந்தவையாக இருக்கின்றதெனக் குறிப்பிடுகின்றார் (சண்முகதாஸ்,2007).

அரசன், வாணிகன், குயவன், ஆசிரியர், கணக்காளர் போன்ற பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களும், சங்க இலக்கிய உருவாக்கங்களில் தங்கள் பங்களிப்புகளினை வழங்கினர். எடுத்துக்காட்டாக: மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனரினால் எழுதிய ஆறு பாடல்களும் (அகம்- 56, 124, 230, 24, 272, 302), மேலும் மதுரை பண்டவாணிகன் இளந்தேவனாரால் எழுதப்பட்ட மூன்று பாட்டுகளும் (அகம்- 8, 298, 328) மற்றும் மதுரைக்கூடலவாணிகன் சீத்தலைச்சாத்தனால் எழுதப்பட்ட ஐந்து பாடல்களும் (அகம்- 54, 134, 229, 306, 320) அகநானூறுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் அகநானூறு, புறநானூறு, பெரும்பான் ஆற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, பொருநர் ஆற்றுப்படை, நற்றிணை, ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5. சங்க இலக்கியங்களில் வணிகம்

பண்டைத்தமிழ் இலக்கியங்களின் வழியாக அவை இயம்பும் பண்பாட்டு ரீதியாக உருவாக்கப்பட்ட தமிழர்களின் வணிகத்தினையும் வணிக நடைமுறைகளினையும் பல பண்புக் கூற்று அடிப்படையில் இங்கு பார்க்கப்படுகின்றது. அவை முறையே:

பண்டமாற்று முறைமை

உள்நாட்டு வணிகம்

வெளிநாட்டு வணிகம்

வரி முறைமை

அடிப்படை வணிக கட்டமைப்புகள்

### 5. 1 பண்டமாற்று முறைமை

ஆதி மனிதன் தனக்குத் தேவையானவற்றினை தானே வேட்டையாடியும், தானே பல்வேறு பிரதேசங்களிலிலிருந்து சேகரித்தும் தனது தேவையினை சுயமாகப் பூர்த்தி செய்து கொண்டான். காலப்போக்கில் மனிததேவைகள் வளர்ச்சியடைய மனிதன் தனது தேவைகளினைப் பூர்த்தி செய்ய பண்டமாற்று முறமையினை ஓர் பரிமாற்று ஊடகமாக, முறைமையாகப் பயன்படுத்தினான். பண்டமாற்று என்பது மக்கள் தமது தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு பொருளினைக் கொடுத்து மற்றொரு பொருளினை வாங்கும் முறையாகும். பண்டமாற்று முறையின் தொழிற்பாடு பணம் புழக்கத்தில் இல்லாத காலத்தில் மனிதனுடைய அடிப்படைத் தேவைகளில் முக்கியமான ஒன்றான உணவுத் தேவையினை பூர்த்தி செய்ய உதவியது.

குறிஞ்சி நிலமக்கள் மலைபடு பொருட்களினை மருதநில மக்களுக்குக் கொடுத்து நெல்லும் ஏனைய தானியங்களினையும் பெற்றுக் கொண்டனர். அதுபோன்றே முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் பால், தயிர், நெய்யினை நெய்தல் நிலமக்களுக்குக் கொடுத்து அவர்களிடமிருந்து தமக்குத் தேவையான மீன், கருவாடு போன்றவற்றைப் பெற்றுக் கொண்டனர். சங்க காலத்தில் மாந்தர்கள் தாம் உற்பத்தி செய்த பொருட்களினை தமது பயன்பாட்டுக்கு பயன்படுத்தியது போக உபரியாக வந்தவற்றை தேவைப்பாடுடையவர்களுக்குக் கொடுத்து அதன் பெறுமதிக்கு சமமானதை தமக்குத் தேவைப்படும் பொருட்களினைப் பெற்றுக்கொண்டார்கள்.

முன்னர் குறிப்பிட்டது போன்று ஆற்றங்கரையோரங்கள், கடற்பகுதிகள், வனப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் கூட்டம் (இனக்குழுக்கள்) விளைவித்த விவசாயப் பொருட்களையும், வனங்கள் மற்றும், ஏனைய பகுதிகளிலிலிருந்து சேகரித்த பொருட்கள், கடலிலிருந்து எடுத்த மற்றும் பிடித்த உணவுப் பொருட்களினையும் மருதநிலங்களில் விளைவித்த நெல்லுக்கு மாற்றீடாகக் கொடுத்து பண்ட மாற்றில் ஈடுபட்டனர் என்பதற்கு இலக்கியங்களில் பல சான்றுகள் உண்டு. எடுத்துக்காட்டாக பரதவர் பாத்திகளில் விளைவித்த உப்பினைக் கொண்டு உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டவர்களினை உமணர், உமட்டியர் என்று அழைத்தனர். இவர்கள் ஊர் ஊராக உப்பினை எடுத்துச் சென்று வியாபாரத்தில் ஈடுபட்டனர். அம்முவனர் என்கின்ற புலவர் உப்பு விற்கும் பெண்ணைக் காதலிக்கும் ஒருவன் அவளைப் பற்றித் தன் நண்பனிடம் அவளையும், அவள் செய்யும் தொழிலையும் வர்ணிப்பது போல் அமைந்த பாடலில், பண்டைமாற்றுக் குறித்த செய்திகளும் இடம்பெறுகிறது.

**நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்,**
**கொள்ளீரோ எனச் சேரிதொறும் நுவலும்** (அகம்:390, 8 -9)

மேலும் நெல்லுக்கும் உப்புக்கும் ஒரே விதமான செலாவணிப் பெறுமதி வழங்கப்பட்டிருந்தது என்பதனை இப்பாடல்வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது. மேலும் ஐங்குறுநூறில் தலைவி கூற்றில் ஒரு செய்யுளில் நெய்தல் நிலமக்கள் மீன்களினைக் கொடுத்து நெல்லினைப் பெற்றார்கள் என்கிற செய்தியும்.

**சின்மீன் சொறிந்து, பல்நெல் பெறூஉம்**
**யாணர் ஊரநின் பாண்மகன்** (ஐங்: 49, 2-3 )

ஐங்குறுநூறில் 47வது செய்யுள் வாயிலாக மீனுக்குப் பதிலாக பயறு பண்ட மாற்றாய் பயன்படுத்தப்பட்டமையும் வெளிப்படுத்தப்படுகிறது.

**முள்ளயிற்றுப் பாண்மகள் இன்கெற்று சொறிந்து**
**அகன்பெரு வட்டி நிறைய, மனையோள்**
**அரிகால் பெரும்பயறு நிறைக்கும் ஊர!**
**மாண்இழை ஆயம் அறியும்நின்,**
**பாணன் போலப் பல பொய்த் தல்லே** (ஐங்: 47)

இச் செய்யுளில் பாணன் மனையாட்டி வட்டி நிறைய கெடிறு இன மீன்களினை உழவன் மனையாளுக்கு வழங்கி மீனுக்குப் பதிலாக உழவன் மனையாளிடமிருந்து வட்டி நிறைய பயற்றினைப் பெறுகின்றாள். இப்பண்டமாற்றில் அதிருப்தியடைந்த உழவன் பெண் பிறிதொரு சந்தர்ப்பத்தில்

கணவனோடு கருத்து முரண்படுகையில், மீனுக்கு நிகர் எனக் கூறி பயறினைப் பெற்ற பாணன் போலப் பொய் பேசாதே என்கின்றாள். இதனை உள்ளார்ந்தமாக நோக்கின் பாணனினால் உழவன் மனைவிக்கு வழங்கப்பட்ட மீனின் அளவிலும், இரட்டை பொருந்துகையிலும் திருப்தியற்றவளாகக் காணப்படுகிறாள் என்பது பெறப்படுகின்றது. எனவேதான் பாணன் போல் நீயும் பொய் பேசாதே என தன் கணவரை உரிமையோடு அதட்டுகின்றாள். உண்மையிலேயே பண்டமாற்று முறைமையில் காணப்படுகின்ற மிக முக்கியமாக குறைபாடுகளான 'இரட்டை பொருந்துகையின்மை', 'பெறுமதி அளவிடமுடியாமை' என்பனவையே உழவன் மனையாளுக்கு இப் பரிமாற்றத்தில் அதிருப்தி நிலையினை ஏற்படுத்தியது.

சங்க காலத்தில் வாழ்ந்த மங்கையர்கள் பண்டமாற்றில் ஈடுபடும் போது பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைந்து கொள்ள அல்லது பொருளாதார ரீதியாக தம்மை வலுப்படுத்திக் கொள்ள உதவும் பொருட்களினை பரிமாற்றம் செய்து கொள்வதில்தான் அதிகம் அக்கறை காட்டினார்கள். இவ்வாறன பரிமாற்றங்களின் மூலம்தான் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவும் வளங்களினை அல்லது செல்வங்களினை தொடர்ச்சியாகப் பெற்று கொள்ள முடியும் என திடமான நம்பிக்கையினையும் மற்றும் முற்போக்குச் சிந்தனையும் கொண்டிருந்தார்கள். இதனை பெரும்பாணாற்றுப்படையில்:

**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்,**
**எருமை, நல்ஆன், கருநாகு பெறூஉம்** (பெரும்: 164-165)

மாநிற மேனியினையுடையவளும், சிறிய அழகிய தோடுகளினை அணிந்த காதுகளினையுடையவளும், மூங்கில் போன்ற தோளை உடையவளும், ஆறடி கூந்தலை உடையவளாகிய மோர் விற்பனை செய்யும் இடையர் மகள்களுக்கு நெய்யுக்கு, மோருக்குப் பதிலாக பெண்கள் விரும்பி அணிந்து கொள்ளும் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன் கொடுத்தாலும் அவைகளினை அவள் நெய்யுக்கு மோருக்குப் பதிலாகப் பெற்று கொள்ளமாட்டாள். தன் வாணிபத்தின் நிலைபேற்றுக்கு தேவையான நல்லின பசுக்களினையும், கன்றுகளினையும், நெய்யுக்கு பதிலாக வாங்க முனைவாள். இதன் மூலமாக சங்க காலத்து பெண்களின் உழைத்து வாழ வேண்டும் என்கிற உத்வேகமும், செய்யும் தொழில் மீது கொண்ட பக்தியும், பொருளாதாரச் சிந்தனையும் வெளிப்படுத்தப்படுகின்றன. இக் கருத்தமைவுகள் வழியாக சங்கம் முதல் சமகாலம் வரையில் தமிழ் மங்கையர்கள் வாணிபத்தில் வெற்றிகரமாக ஈடுபட்டவர்கள் என்பது வெளிப்படுகிறது. மேலும் பெருநர் ஆற்றுப்படையில் ஐந்து

வகையான நிலங்களுக்கு இடையே நடை பெற்ற பண்டமாற்று முறைமைகளும் மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

**தேன்நெய்யொடு கிழங்குமாறியோர்**
**மீன்நெய்யொடு நறவுமறுகவும்**
**தீங்கரும்போடு அவல்வகுத்தோர்**
**மான்குறையொடு மதுமறுகவும்** (பொருள்: 214-217)

பண்டமாற்ற முறையில் குறிஞ்சி நிலத்தவர்கள் தேன், கிழங்கு போன்றவற்றினை நெய்தல் நிலத்து மக்களுக்குக் கொடுத்து அவற்றுக்குப் பதிலாக மீன், மீன்நெய், நறவையும் பெற்றுக் கொண்டனர். இவ் செய்யுள் வரிகளின் மூலம் மருத நில மக்கள் தமது விளைபொருளான கரும்பு, அவல் போன்றவற்றினை முல்லை நிலமக்களுக்குக் கொடுத்து. அவர்களிடமிருந்து மான் இறைச்சியினையும், போதை தரும் மதுவினையும் பெற்று நுகர்ந்தார்கள்.

தொன்மையான சங்க இலக்கியங்களின் வாயிலாக பண்டைத் தமிழர்களினால் பயன்படுத்தப்பட்ட பண்டமாற்று முறையில் பின்வரும் பிரதானமான இயல்புகள் அவதானிக்கத் தக்கதாகவுள்ளன.

* பண்டமாற்று முறையினால் முடியானவனுக்கும்சரி, குடியானவனுக்கும்சரி வருமானம் குறைவாகவே காணப்பட்டது.

* தேவையின் அடிப்படையில் பண்டமாற்றில் ஈடுபட்டவர்களுக்கு இடையே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இரட்டைப் பொருந்துகைதன்மை காணப்பட்டது. ஆனாலும் பெறுமதியிடல் மிகச் சிக்கலானதாகவே காணப்பட்டது.

* ஐவகை நிலங்களில் வாழ்ந்த இனக்குழுக்கள் தத்தமக்கே உரித்தான வாழ்வியல் மற்றும் பண்பாட்டு முறமையின் அடிப்படையில் பண்டமாற்றில் ஈடுபட்டனர். அங்கு அவர்களுக்கே உரித்தான பொருளாதார, பண்பாட்டு விழுமியங்கள் மேலோங்கியிருந்ததனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. உதாரணமாக இங்கு ஓர் இடத்தில் கிடைத்த அல்லது விளைந்த பொருட்களில் தமது தேவைகளுக்கு மேலதிகமாக இருந்தவற்றை, அத்தகைய பண்டங்கள் கிடைக்கப் பெறாத இடத்தில் அல்லது விளையவைக்க முடியாத இடத்துக்கு பரிமாற்றிக் கொள்ளப்பட்டது.

* இங்கு இலாப நட்டம் என்ற கணக்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஏன்எனில் மேற்கூறிய சங்க இலக்கியங்களின் வாயிலாக நோக்கில் நெல்லுக்கு உப்பும்

மற்றும் மீனும் பரிமாற்றப்பட்டிருந்தது. எனவே இங்கே "இலாப நட்டம்" என்கின்ற சித்தாந்தங்களைவிடுத்து இணைந்து செயற்பட்டு இன்புறுவோம்" என்கின்ற தமிழ்ப் பண்பாட்டியல் சித்தாந்தமே முதன்மை பெறுகின்றது.

கால ஓட்டத்தில் உற்பத்திகளின் மிகைகள் உடமை கொள்ளத்தக்க சொத்தாகவும், செல்வமாகவும் மாறிய காலகட்டத்தில் நாணயங்களின் புழக்கத்துக்கு முன்னர் தமிழர் இராச்சியங்களில் நிலையான அரசு உருவாக்கப்பட்ட பின்னர் தங்கம், வெள்ளி, நாணயங்களினை அலகுகளாகக் கொண்டு நிறுத்தல் அளத்தல் என்கின்ற அளவை முறையுடன் வியாபாரம் நடைபெற்றதாக தொன்மை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

### 5.2 உள்நாட்டு வாணிபம்

சங்ககாலத்தில் உள்நாட்டு மற்றும் கடல் வழி வியாபாரங்களின் ஊடாகத்தான் அரசு செழுமை பெற்றது என்றால் மிகையல்ல. உள்நாட்டு வியாபாரத்தில் பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பட்டினப்பாலை என்னும் நூலில்.

**நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்,**
**காலின் வந்த கருங்கறி மூடையும்,**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,**
**குடமலைப் பிறந்த ஆரமும் அதிலும்,**
**தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,**
**கங்கை வாரியும், காவிரிப் பயனும்,**
**ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,**
**அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி,**
**வளம்ந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்,** **(பட்: 185 – 195)**

காவேரிப்பூம்பட்டினத்தில் உள்ள தெருக்களில் நிமிர்ந்து கம்பீரமாக காட்சியளிக்கின்ற குதிரைகளும், வண்டிகளில் வந்த மிளகு மூட்டைகளும், பொன், முத்து, சந்தணம், அகில், பவளம், மற்றும் கங்கை, காவேரி நதிக்கரைகளில் விளைவிக்கப்பட்ட பொருட்களும், ஈழத்திலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுப் பண்டங்களும், மியன்மாரிலிருந்து கொண்டுவரப்பட்ட அரிய வகையான பொருட்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. மேலும் சங்க காலத்தில் நடை பெற்ற உள் நாட்டு வணிகத்தில் உப்பு வணிகம் முதன்மை பெற்றிருந்தது. என்பதற்கு இலக்கியங்களிலிருந்து பல சான்றுகளைப் பகிரலாம். எடுத்துக்காட்டாக

பெரும்பாணாற்றுப்படையில் (46 - 65) வரிகளில். உப்பு வணிகர்கள் செல்லும் வழியினையும், வாணிபத்தில் ஈடுபடுபவர்கள் பயன்படுத்துகின்ற வண்டிகளினைப் பற்றியும் பல பாடல் வரிகள் உள்ளன. தொண்டை நாட்டின் தலைநகராம் காஞ்சிக்குச் செல்லும் பெருவழியில் நிரல், நிரல்களாக உமணர்கள் உப்பினை ஏற்றிய வண்டியுடன் செல்வார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லும் உப்பினை மருத நிலத்து உழவர்களுக்கும், முல்லை நிலத்து ஆயர்களுக்கும் குறிஞ்சி நிலத்து குறவர்களுக்கும், பாலை நிலத்து மறவர்களுக்கும் விற்பனை செய்து தமது தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்குரிய பணத்தினை திரட்டிக் கொள்வார்கள்.

மேலும் தமிழர் தம் பண்பாட்டில், 'பூ' முக்கிய வகிபங்கினைக் கொண்டுள்ளது. இந்தவகையில் பூவையரே பூவில் அதிக நாட்டம் கொண்டிருப்பார்கள். இதனால்அன்றோ பண்டைத்தமிழன் வணிகத்தில் உயர்நிலையில் பூ வியாபாரம் இடம்பெற்றிருந்தது. இக்கருத்தமைவை பின்வரும் நற்றினை செய்யுள் சுட்டிக் காட்டுகின்றது.

**புதுமலர் நெருவு தொறு நுவலும்**
**நொதுமலாட்டிக்கு நோம், என் நெஞ்சே!** (நற்: 118, 10 - 11)

வண்டுகள் மொய்த்திருக்க கூடையிலேந்தி அழகிய பூ விற்கும் மங்கையர்கள் வீதி வீதியாகக் கூவி விற்றுக் கொண்டு செல்வார்கள். மேலுமாய் மிளகு, முத்து, இரத்தினங்கள் போன்றவற்றினை விற்பனை செய்வதனால் அதிகளவு பொற் காசுகளினை பெற்றுக் கொள்ள முடியும். விற்பனை செய்யப்படும் பொருட்கள் பெறுமதி வாய்ந்தவை என்பதனால் வணிகர்கள் தமது பண்டங்களுக்கான பாதுகாப்பினை முடிக்குரியவனிடம் வேண்டி நிற்பதும், அவ்வேண்டுதலுக்கு செவிமடுத்து வணிகர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதும் முடிக்குரியவனுக்கான கடைப்பாடாக அமைந்தது ஆகும். உண்மையில் இதுவே மன்னனின் சமூகப் பொறுப்பு. இதனை அகநானூறு செய்யுள் ஒன்றில் பின்வருமாறாய் குறிப்பிடப்படுகிறது.

**நெடுஞ்செவிக் கழுதை குறுங்காலேற்றைப்**
**புறநிலை பண்டத்து பொறை சாய்க்களைத்து**
**பெயர்படை கொள்ளார்க்கு உயவுத்துணையாகி**
**உயர்ந்த ஆள்வினை புரிந்தோய்** (அகம் 243)

### 5.3 கடல் வாணிபம்

பண்டைத் தமிழ் இலக்கியங்களின் வாயிலாகவும் தமிழர்கள் கிரேக்க, உரோம, எகிப்து, சீனம், யவனம், காழகம், கடாரம் போன்ற நாடுகளுடன் கடல் வணிகத்தில் ஈடுபட்டனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சங்ககாலத்தில் ஆட்சியாளர்கள் கப்பல் வணிகத்தில் அதிதீவிரமான அக்கறையினைக் கொண்டிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து பொருட்களினை ஏற்றி வந்து வணிகம் செய்வதற்குப் பயன்படுத்திய மரக்கலங்களினை நாவாய், வங்கம் என அழைத்தனர். இவ்வாறான நாவாய், வங்கம் பயன்படுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டதுக்கு சங்க நூல்கள் முதல் சங்கம்மருவிய காலத்து இலக்கிய நூல்கள் வரை சான்று பகிர்கின்றன. இங்கு சங்க இலக்கியங்களிலிருந்து சிலவற்றினை எடுத்துக்காட்டலாம்.

கடல் வாணிபத்தினை மேற்கொள்வதற்கு நாவாய்கள் பயன்படுத்தப்பட்டமை பற்றி கட்டியலூர் உருத்திரங் கண்ணனார் என்ற புலவரினால் பாடப்பட்ட பட்டினப்பாலையில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

**தொல்லாணை நல்லாசிரியர்**
**உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்,**
**வெளில் இளக்கும் களிறுபோல,**
**தீம்புகார்த் திரைமுன் துறைத்,**
**தூங்குநாவாய் துவன்றுஇருக்கை** (பட்: 170 - 174)

பும்புகார் துறைமுகநகரத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள மரக்கலங்களில் (நாவாய்) பறக்கின்ற கொடிகள் மரக்கலங்களின் தறியில் கட்டப்பட்ட யானைகள் அசைவது போல் அழகாக இருந்தன. மரக்கலங்கள், பரிசில், கட்டுமரம், திமில் வங்கம், அம்பி போன்றவை கடல் வழிப் பயணத்துக்கு பயன்படுத்தப்பட்ட அற்புதமான போக்குவரத்து சாதனங்கள் ஆகும். பண்டைத் தமிழன் வாணிபத்தில் சிறந்து விளங்கியமைக்கு அவனால் பயன்படுத்தப்பட்ட சிறந்த போக்குவரத்து முறைமை ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. பண்டைத் தமிழர்கள் கடல்வழி மார்க்கமாக வெளிநாட்டு வியாபாரத்தினை மட்டுமல்ல உள்நாட்டு வியாபாரத்தினையும் மேற்கொண்டனர். பெரும்பாணாற்றுப்படையில் துறைமுகப்பட்டினத்தின் சிறப்பினை வர்ணிக்கையில்;

**நீர்ப்பெற்று எல்லைப் போகிப் பாற்கேழ்**
**வாய் உளைப் புரவியொடு வடவளம் தரூடம்**

**நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை**
**மாடம் ஓங்கிய மணல்மலி மறுகின்** (பெரும்: 319-325)

எனக்குறிப்பிடப்படுகின்றது. வங்க நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் (கடல் கடந்து) வரும் மரக்கலங்கள் (கப்பல்கள்) நீர்ப்பாய்ல் பட்டினத்தில் நங்கூரம் இட்டிருந்தன. 'நாவாய்' என்பதும் 'வங்கம்' என்பதும் கடலில் ஓடப் பயன்படுத்தப்படும் மரக்கலம் தான் என்பதனை இலக்கியங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. உலகப் பொதுமறையாம் திருக்குறளில் 50 ஆவது அதிகாரமான இடர் அறிதலின் 496 ஆவது குறளில் வள்ளுவர்:

**கடல் ஓடா கால்வாய் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடாநிலத்து** (திரு: 496)

இக்குறள்வழி "நாவாய்" என்பது நிலத்தில் (தரையில்) ஓடாது தண்ணீரில் (கடலில்) ஓடுகின்ற ஊர்தியைத் தான் குறிக்கின்றது. இது போன்றே இன்னொரு சங்கம்மருவிய கால இலக்கிமான ஐந்திணையெழுபதில் மூவாதியார் என்னும் புலவர் சோழர்களின் ஆட்சியினையும், கடல் வளத்தினையும், கடல் வணிகத்தினையும் வர்ணிப்பதற்காக நெய்தல் நில பாடல் தொகுப்பில் பின்வரும் பாடலைப்பாடியுள்ளார்.

**கண்திரண் முத்தம் பயக்கும் இருமுந்நீர்**
**பண்டம் கொள் நாவாய் வழங்கும் துறைவனை**
**முண்டக கானலுள் கண்டேன் என தெளிந்தேன்**
**நின்ற உணர்வு இல்லாதேள்** (ஐந்திணையெழுபது: 61)

முத்துக்கள் மற்றும் பல்வேறு பொருட்களினை ஏற்றிச் செல்வதற்கு உதவும் மரக்கலங்களினையும் (நாவாய்), நன்கு கட்டமைக்கப்பட்ட துறைமுகங்களினையும் அழகிய கடற்கரைச்சாலைகளில் சோழனின் ஆட்சிகாலத்தில் கண்டேன் என குறிப்பிட்டிருந்தார். மேலும் சங்கத்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில்:

**வளிவழக்கு அறுத்த வங்கம் போல**
**குருதிஅம் பெரும்புனல் கூர்ந்தனவே: ஆங்க** (புறம்: 368, 9 - 10)

என கழாத்தலையார், என்கின்ற புலவர் யுத்தம் முடிந்த பின்னர் யுத்த வடுக்களுடன் காணப்படும் யுத்தகளத்தினை: புயல் தாக்கி பாய்மரம் அறுந்துபோன கப்பல் போன்று குருதிக்கடலில் மிதக்கின்றன என ஒப்புமை செய்கிறார். இதை ஒத்த பாடல் ஒன்று மேலும் புறநானூற்றில் இடம் பெறுகின்றது.

**இருங்கழி இழிதரு ஆர்கலி வங்கம் (புறம்: 400, 20)**

இவ்வாறாகத் தொன்மை இலக்கியங்களின் காணப்படுகின்ற இலக்கிய சான்றுகளின் துணையுடன் தமிழினம் கப்பல் வாணிபத்தினை நீண்ட காலமாக மேற்கொண்டிருந்தது என்பது புலப்படுகின்றது. இந்தகைய கடல் வாணிபத்தில் சேரநாடு சிறந்து விளங்கியதற்கு அந்நாட்டின் இயற்கை வளமும் ஓர் பிரதான காரணியாக அமைந்திருந்தது (குட்சிணாமூர்த்தி. ப.90).

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் என அழைக்கப்பட்ட நெடுஞ்சேரலாதன் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்க பல்வேறு தந்திரோபாயங்களை மேற்கொண்டார். சேர மன்னர்களின் காலத்தில் முசிறிதுறைமுகம் முதன்மையானதாக காணப்பட்டது. முசிறி துறைமுகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தினையும், முசிறியின் சிறப்பினையும் புறநானூறில் பரணர் என்கின்ற புலவர் பின்வருமாறு அழகுற சித்தரிக்கின்றார்:

**மீன்நொடுத்து செல்நுவைகி,**
**மிசை அம்பின் மனை மறுக்குந்து:**
**மனைக் குவைஇய கறி மூடையால்,**
**கலிச் சும்பைய கரைகலக் குறுந்து,**
**கலம் தந்த பொற் பரிசம்**
**கழித்தோணியாள், கரைசேர்க்குந்து**
**மலைத் தாரமும் கடல்தாரமும்**
**தலைப்பெய்து, வருநகர்க்குந்து ஈயும்**
**புனல்அம் கன்னின் பொலந்தார்க் குட்டுவன்** **(புறம்: 343, 1-10)**

பொன், இரத்தினம், புடைவைகள், அழகிய ஓவியங்கள் நிறைந்த ஆடைகள், பவளம், செம்பு, ஈயம், கோதுமை போன்றவை இத்துறைமுகத்தில் இறக்கப்பட்டன. மிளகு, முத்து, யானைத்தந்தங்கள், பட்டு, இரத்தினம் போன்றவை இங்கிருந்து பாலத்தீனம், உரோம், சீனம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன (வித்தியானந்தன், 1954, ப 244, 245). இருந்த போதும் முத்து முதன்மையான ஏற்றுமதிப் பொருளாக விளங்கியது. மேலும் மதுரைகாஞ்சி (135 - 138) என்னும் இலக்கியத்தில் முத்தும் சங்கும் கடலில் தேடி கண்டுபிடிப்பதற்கு என ஒரு சமூகம் அக்காலத்தில் கொற்றை துறைமுகத்துக்கு அருகாமையில் அதாவது "சேரியில் வாழந்ததாகவும் அவர்கள் மேலும் மன்னன்

நெடுஞ்செழியனின் நட்பு வட்டத்தில் வாழ்ந்திட அவாவுற்றிருந்தனர் எனவும் செய்யுள் வழி கூறப்பட்டுள்ளது.

**விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்**
**இலங்குவளை இருஞ்சேரிக்**
**கள்கொண்டிக் குடிப்பாக்கத்து**
**நற்கொள்கையோர் நசைப்பொருந!** (மதுரை:135 - 138)

குற்றவாளிகள் எனச் சிறையில் அடைக்கப்பட்ட சிறைக் கைதிகள் முத்துக் குளிப்பதற்கு பயன்படுத்தப்பட்டனர். பண்டைய உரோம, கிரேக்க நாடுகளில் வாழ்ந்த வசதி படைத்தவர்கள் முத்துக்களினையும், பவளத்தினையும் பயன்படுத்தி தமது ஆடைகளினை அலங்கரிப்பதற்கு அவற்றைத் தமிழ் வணிகர்களிடமிருந்து கொள்வனவு செய்தனர். 'தமிழர்சால்பு' என்னும் நூலில் பவளம் சோழ மண்டலக்கரையில் விளைந்தது எனவும், இருப்பினும் முத்திலிருந்து கிடைத்த வருமானம் அளவுக்கு பவளத்தின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏன்எனில் பவளத்தினை இந்தியப் பெண்கள் விரும்பி மதிக்கும் அளவுக்கு சமமாக உரோமப் பெண்கள் முத்தின் மீது அதீத மதிப்பினைக் கொண்டவராகக் காணப்பட்டனர். பாண்டிய மன்னன் அறம் வழி நின்று முத்து வாணிபத்தில் ஈடுபட்டான் என அகநானூற்றில் மதுரைக்கணக்காயனார் என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்**
**கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன** (அகம்: 27, 8 9)

தொல்காப்பியத்தில் காணப்படுகின்ற "முந்நீர் வழக்கம்" என்று கூறப்படுவதிலிருந்து. தொல்காப்பியம் என்னும் தமிழ் இலக்கண நூல் இயற்றப்படுவதற்கு முன்னே தமிழர்கள் கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபட்டனர். கடல் வணிகமும் தமிழர் வாழ்வியலில் ஒரு அங்கமாக நோக்கப்படுகின்றது. இன்று கடல்வழி வணிகத்தின் வழியாக எண்ணிறைந்த செல்வத்தை வளர்முக நாடுகள் பெற்றுக் கொள்கின்ற யுத்தியினை அன்றே தமிழ் அரசர்கள் கையாண்டு பொருளீட்டியிருந்தனர் என்பது இங்கு சிந்தித்தற்குரியது.

### 5.4 வரியிடல் முறைமை

பண்டைய அரசர்களுக்கும், வணிகர்களுக்குமிடையே நெருக்கமானதும், காத்திரமானதுமான உறவு இருந்தது. ஏன் எனில் ஒரு நாட்டினைச் செழுமைப்படுத்துவதற்கு வணிகர்களிடமிருந்து அறவிடப்படும் வரி

வருமானம் பெருந் தேவையாய் இருந்தது. அதேவேளை அந்த வரிவருமானம் வாணிபத்தினை பாதுகாப்பான சூழலினை ஏற்பாடு செய்வதற்கு தேவைப்பட்டது. திருவள்ளுவர் 'பொருள் செயல்வகை' எனகிற அதிகாரத்தில்:

**உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**
**தெறு பொருளும் வேந்தன் பொருள் (திரு: 756)**

இக் குறளின் வாயிலாக பண்டைய காலத்தில் அரசின் வருமானம் பின்வரும் மூன்று மூலங்களின் வாயிலாக பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதை ஊகிக்கலாம். உடமையாளர்கள் யாருமின்றி தானாக வந்த பொருட்கள் (இயற்கையாகத் தோன்றிய அல்லது கிடைத்த பொருட்கள்). சுங்கம் அறவிடுவதனால் வந்த பொருட்கள், சிற்றரசர்களிடமிருந்து இறையாகக் கொள்ளும் பொருட்கள் போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளும் வருமானங்கள். இவற்றில் அதிகளவிலானதும், நிலையானதுமான வருமானத்தினை பெற்றுத் தருவது 'வாணிபச்சுங்கம்' ஆகும். இவ்வாணிப சுங்கத்தினை 'உல்கு' மற்றும் 'வரி' என்றும் வேறு வேறு வார்த்தைகளினாலும் அழைத்தனர்.

நாட்டின் செழுமைக்கு ஆதார சுருதியாக அமைந்த உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தினை மேற்கொள்ளும் வணிகர்கள் ஓம்பப் படவேண்டியவர்கள் என சங்கப் புலவர்கள் அழுத்தி அரசுக்கு அறிவுரை கூறுவது போன்ற பாடல்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அந்த வகையில் புறநானூற்றின் இப்பாடலினை உதாரணமாக கொள்ளுதல் பொருத்தமானது ஆகும்.

**பகடு புறந் தருநர் பாரம் ஓம்பி,**
**குடிபுறந் தருகுவை ஆயின், நின்**
**அடிபுறந் தருவார், அடங்காதோரே (புறம்: 35: 32-34)**

இறையாளனதும், இறைபுலத்தினதும் பொருளாதார வளத்துக்கு அடிப்படையாக விளங்குகின்ற வணிகர்கள் உயர்குடி பிறந்தவர்கள் முடிக்குரிய மன்னனால் பாதுகாக்கப்பட்டும் மேலும் அரசன் அவர்களது, வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதுமான செயற்பாடுகளை மேற் கொள்ளவேண்டும்.

இத்தகைய அரச செயற்பாடுகள் உள்நாட்டில் மேம்பாட்டுக்கு மட்டுமல்லாமல் அரசுக்கு வெளியே, அரசனது ஆளுமைக்கு அப்பாலாய் வாழும் பகையாளிகளினைக் கூடப் பணியவைக்கும், ஓர் நுட்பமான தந்திரோபாயமாக இது அமைகிறது. இன்று பாதுகாப்பு என்ற அடிப்படையில் அரசாங்கத்தால்

மேற்கொள்ளப்படும் காவல் அன்று ஊள் அல்லது 'காவல்' என்று அழைக்கப்பட்டது. காவலுக்கான வேதனம், பிற செலவினங்களை தாங்கிக் கொள்வதற்கு வணிகர் வழி வரவுகள் துணைபுரிகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வட இந்தியாவில் கங்கைச் சமவெளியில் தோன்றிய மௌரிய வம்சங்களின் சாம்ராஜ்ய காலங்களில் கூட சத்திரிய வைசியர்களுக்கும் இடையிலே நல் உறவு இருந்ததாக செய்திகள் உண்டு. கோசாம்பி என்கின்ற அறிஞர் இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "வணிக சத்திரிய இணைவுக்கும் அறக்கருத்துக்களுக்கும் சம்பந்தம் உண்டு. பாதுகாப்பான வியாபாரத்துக்கு பரந்து பட்ட முடியாட்சி வளர்ச்சி அவசியமானது" என்கிறார். (கோசாம்பி. 1989 : 179). இதன் அடிப்படையில் வணிகத்தினை தொடர்ச்சியாகவும், இலாபகரமாகவும் மேற்கொள்ளுவதற்கு ஓர் நிலையான ஆட்சிமுறைமை தேவைப்படுகின்றது.

அதேவேளை நாட்டினை செல்வச் செழிப்புடன் ஆளுவதற்கு வாணிபத்திலிருந்து கிடைக்கும் சுங்க வருமானம் தேவைப்படுகின்றது. இதனால் 'சத்திரிய வைசிய' உறவின் சார்பு நிலைத்தன்மை தவிர்க்க முடியாதது ஆயிற்று. பண்டைய வேந்தர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகங்களுக்குப் பாகுபாடின்றி சுங்கம் அறவிட்டார்கள். கடல் வணிகத்தில் ஈடுபட்டவர்களிடம் இருந்து அறவிட்ட வரிவருமானமே உபரியாய் கிடைக்கப்பெற்றது.

காவிரிப்பூம்பட்டினத்தினை துறைமுக நகராகவும் மதுரையினை தலை நகராகவும் (அரசியல் தலைமைப்பீடமாகவும்) கொண்டு ஆட்சிபுரிந்த கரிகாற் பெருவளவனுக்கு காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து அறவிடப்படுகின்ற சுங்கம் செழிப்பாகக் கிடைத்து வந்தது என்பதனை பட்டினப்பாலையில் உள்ள பின்வரும் பாடல்மூலம் அறிந்து கொள்ளலாம்.

> **நல்இறைவன் பொருள்காக்கும்**
> **தொல்இசைத் தொழில்மாக்கள்**
> **காய்சினத்த கதிர்ச்செல்வன்**
> **தேர்பூண்ட மாஅபோல,**
> **வைகல்தொறும் அசைவின்றி,**
> **உல்குசெயக் குறைபடாது** (பட். 120-125)

கரிகாற் பெருவளவனால் சுங்கம் வசூலிக்க நியமிக்கப்பட்ட ஊழியர்கள் ஓய்வு உறக்கமின்றித் தொடர்ச்சியாக ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களுக்கு சுங்கம் அறவிடுவதை ஒப்புமை செய்வதற்காக சூரிய பகவானுடைய இரதத்தினை

இழுக்கும் குதிரைகள் எவ்வாறு ஓய்வு இன்றி செயற்பட்டு சூரியபகவானின் இயக்கத்தை உறுதிப்படுத்துகின்றதோ அவ்வாறே காவிரிப் பூம் பட்டினத்தின் வரி அறவிடுகின்ற ஊழியர்கள் ஓய்வு உறக்கமின்றி செயற்பட்டனர் என எடுத்துக் கூறப்படுகிறது. கரிகாற் பெருவளவனின் கஜானா எப்போதும் நிரம்பியிருந்தது. சுங்கம் செலுத்திய பின்னர் அதனை உறுதிப்படுத்தி புலிச் சின்னம் பொறிக்கப்பட்டது. பண்டைய காலத்தில் வணிகர்கள் குழுக்களாக (வணிகச்சாத்து) பயணம் செய்யும் போது அவர்களுடைய வணிகப் பொருட்களின் பெறுமதிக்கும், அதன் தன்மைக்கும் ஏற்றபடி வரி அறவிடப்பட்டது. இத்தகைய சுங்கம் அறவிடும் முறைகளைப் பற்றி பெரும்பாணாற்றுப்படையில் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

**அணர்ச் செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்**
**உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**
**வில்லுடை வைப்பின் வியன்காட்டு இயவின்** (பெரும்: 80-82)

பண்டைய தமிழர் இராச்சியம் அகிலம் எங்கும் வியாபித்துக் கிடந்தமையினால் அரசர்களுக்கு வரியிடலிலிருந்து கிடைக்கும் வருமானம் எப்போதும் அதிகமாயிருந்தது. வரியாக பண்டங்கள், முத்துக்கள், பொன், மாணிக்கங்கள், யானைகள் என்பன கிடைக்கப் பெற்றன. வரிவழி வருமானமானது அன்றும் என்றும் நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாகவே உள்ளது. வரியிடலிலும் அறம் பேணப்பட்டது. வணிக அறம் என்பது (Business ethics) வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் சமூகத்தில் காணப்படுகின்ற அறம் மற்றும் அறம் சார்ந்த தத்துவங்கள், வரன்முறைகள் போன்றவை பிரயோகிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. மேலும் பொருட்கள், சேவைகளினை உற்பத்தி செய்து அவற்றினை இறுதிப் பாவனையாளர் வரை எடுத்து செல்லும் அனைத்து செயற்பாடுகளிலும் செயன்முறையிலும் எது தார்மீக ரீதியாக சரி, பிழை என்பது பற்றிய ஒரு கற்கையே வணிக அறம் என வரையறுப்பர்.

**5.5 அடிப்படை உட்கட்டமைப்பு**

செங்கடல் செலவு என அழைக்கப்படும் நூல் ஆரம்பகால உரோம, கிரேக்க, இந்திய கடல் வழி வணிக வரலாற்றினைக் கூறுகின்றது. இந்த நூலில் பண்டைய தமிழனின் வாணிபமும் அவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட துறைமுகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலில் சங்க இலக்கியங்களில் குறிப்பாக பட்டினப்பாலையில் காவிரிப் பூம்பட்டினம், பூம்புகார் என்ற பெயர்களில் வழங்கிய சோழர்களின் துறைமுகப் பட்டணம் காபேரிஸ் என்றும் மேலும் கொற்கைத் துறைமுகத்தினை கொல்கி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று யாழ்பாணத் தொன்மை வரலாறு என்கிற நூலில் சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். மேலும் சுந்தரம் (1978 ப.97) மற்றும் தட்சிணாமூர்த்தி (2021) போன்ற அறிஞர்கள் முசிறி, கொற்கை, பூம்புகார், சாலியூர், தொண்டி, எயிற்பட்டிம், மருங்கூர்ப்பட்டினம் முதலிய பண்டைக் கால துறைமுகங்களின் ஊடாக தமிழன் வியாபாரத்தில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாது, உலக வாணிப வரலாற்றில் தனக்கு என்று ஒரு இடத்தினை உருவாக்கிக் கொண்டான் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இக்கருத்துக்களுக்கு மகுடமாய், ராஜன் என்னும் அறிஞரினால் எழுதப்பட்ட ‘தொல்லியல் நோக்கில் சங்க காலம்’ 1889ம் ஆண்டு என்ற நூலில் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் நிறுவப்பட்ட Kunsthistorisches Museum Wien என்ற அரும்பொருட் காட்சியகத்தில், கி.பி 2ம் நூற்றாண்டில் எகிப்து நாட்டில் நைல் நதி ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள அலெக்சான்டிறா என்ற துறைமுகத்தில் வாழ்ந்த வணிகன் ஒருவனுக்கும், முசிறியில் (இந்தியா) வாழ்ந்த தமிழ் வணிகன் ஒருவனுக்கும் இடையில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட வியாபார உடன்படிக்கை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்கிறார். இவ் உடன்படிக்கையில் பொருட்கள் இந்தியாவிலிருந்து கிரேக்க தேசத்தினை சென்று அடையும் வரையான செலவுகள், பிரயாண காலம், ஏற்றி இறக்கல் செலவினங்கள் (மாட்டுவண்டி கூலிகள் உட்பட) போன்றவை எல்லாம் இற்றைக்கு 2000 ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த வணிக உடன்படிக்கையில் எழுதப்பட்டிருப்பதனைக் கண்டு கொள்ளலாம் என்னும் போது தமிழருடைய பண்பாட்டு ரீதியானதும், வரையறைகளுக்கு உட்பட்டதுமான அணுகு முறையானது வியக்கத்தக்கதும் போற்றத்தக்கதுமாகும். சட்ட பூர்வமாக அமுற்படுத்தக் கூடிய ஒப்பந்தம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை இயல்புகளான கொடை முனைவு, ஏற்பு, பிரதிபயன், சட்டரீதியான உறவினை உருவாக்குவதற்கான எண்ணம், கட்சிக்காரர்களின் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான தகைமை, பொருளின் சட்டபூர்வத்தன்மை, சம்மதத்தின் உண்மையான தன்மை போன்றவை அன்றைய பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட வணிக ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருக்கின்றது என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

தமிழர்களுடன் வணிகத்தில் ஈடுபட்ட கிரேக்க உரோமர்கள் மற்றும் அராபியர்கள் யவனர் என அழைக்கப்பட்டனர். அவர்கள் துறைமுக நகரங்களில் தங்கி தமது வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டனர் எனவும்,

அவர்கள் தங்குவதற்கு என யவனர் இருக்கைகள் இருந்தன எனவும் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. யவனர்கள் பொன்கொடுத்து மிளகினைக் கொள்வனவு செய்தார்கள் என அகநானூறு செய்யுளிள் தகவல் ஒன்றினைத் தருகின்றது.

**யவனர் தந்த வினை மாற்ற நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியோடு பெயரும்** (அகம்: 149, 9-10)

நவீன உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் கடைபிடிக்கின்ற இரு நகரக் கொள்கையானது, ஆதித்தமிழன் இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கடைப்பிடித்தனர். உதாரணமாக, ஆஸ்திரேலியாவின் தலைநகரம் கான்பரா எனினும் சிட்னி வியாபார அல்லது துறைமுக நகரம். இந்தியாவினை நோக்கில் புதுடில்லி அரசியல் தலை நகராகவும் அதேவேளை பம்பாய் வியாபார அல்லது பொருளாதார தலைநகரமாகவும் காணப்படுகின்றது. இத்தகையதொரு அணுகுமுறை பண்டைய தமிழ் மன்னர்களிடமும் காணப்பட்டது. உதாரணமாக மதுரையின் அரசியல் தலைநகர் கொற்கை, துறைமுக நகர் உறையூர், பூம்புகார், வரிசை தொண்டி போன்றவை அமைந்திருந்தன. பெரும்பாணாற்றுப்படையில் அடியலூர் கண்ணனார் என்ற புலவரினால் காஞ்சியை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனைப் பற்றி பாடிய பாடலில்

**வால்உளைப் புரவியொடு வடவளம் தரூஉம்**
**நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை** (பெரும்:320-321)

துறைமுகத்தின் சிறப்பினைப் பின்வருமாறு வர்ணிக்கின்றார். கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபடுவதற்கு விதேச நாடுகளில் இருந்து வருகை தந்த கப்பல்கள் அல்லது மரக்கலங்களும், வங்க தேசத்திலிருந்து வருகை தந்த கடல் ஓரப் போக்குவரத்திற்கு உகந்த ஓடங்களும் உறக்கமற்ற கடல் அலைகளினால் ஓய்வின்றி அசைந்து ஆடிய வண்ணம் காட்சி தருவதுடன், அங்கே அரசின் தேவைக்கு வெளிநாடுகளில் இருந்து வருவிக்கப்பட்ட குதிரைகளும் இமயத்தின் அடியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொன், நவமணிகள், வங்க நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட வனப்புறு பொருட்களும் கப்பல்களில் இருந்தும் ஓடங்களிலிருந்தும் இறக்கி அழகாக வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. மேலும் வீதியின் இரு மருங்கிலும் வணிகர்களின் கடைகளும், அவர்கள் வாழ்கின்ற மாட மாளிகைகளாகக் காட்சிதரும் இல்லங்களும் அமைந்திருந்தன. இவை வணிகத்தின் செழுமையினையும், நாடொன்று எவ்வாறு வணிகத்தின் செழுமையால் சிறப்படைகின்றது என்பதனையும் புலப்படுத்துகின்றது. மேலும்

துறைமுக நகரங்களின் மண் வளமானது விவசாய தொழிலுக்கு உகந்ததல்ல. ஆதலால். அங்கு காளைகளையும், பசு மாடுகளையும் காண முடியாது என்றும் மாறாக உணவுத் தேவைக்குப் பயன்படுத்துவதற்காக ஆட்டுக்கிடாய்களே துறைமுக நகரில் வளர்க்கப்படுகின்றன. துறைமுக நகரில் வாழ்ந்த மக்கள் கடல் கடந்து வருகை தந்த வணிகர்களுடன் இனமொழி பாகுபாடுகள் இன்றி இன்புற்றுப் பழகினர். வாழ்ந்தனர். பட்டினப் பாலை செய்யுள் ஒன்று இதற்குச் சான்றுரைக்கின்றது.

**மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்**
**முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்** (பட: 216-218)

இதன் வாயிலாக பூம்புகார் நகரில் வாழ்ந்த மக்கள் வியாபாரத்தின் நோக்கத்துக்காக வெளிதேசத்தில் இருந்து வருகை தந்த மக்களுடன் சகஜமாகப் பழகினர் என்பது புலப்படுகின்றது. மேலும் கடற்கரை ஓரத்தில் கப்பல்கள், ஓடங்கள், மரக்கலங்கள் திசைமாறிப் பயணம் செய்யாது இருக்க வழிகாட்டும் வகையில் நடுக்கடலில் வருகின்றபோதே கடலின் கரையினை அடையாளம் கண்டகொள்ள துறைமுகத்தில் கலங்கரை விளக்கு நீர்ப்பாய்த் துறையில் அமைக்கப்பட்டிருந்தது. இச்செய்தி பெரும்பாணாற்றுப் படையில் மிக அழகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

**வானம் ஊன்றிய மதலை போல,**
**ஏணி சாத்திய ஏற்று அரஞ் சென்னி**
**விண்பொர நிவந்தஇ வேயா மாடத்து**
**இரவில் மாட்டிய இலங்குசுடர் நெகிழி**
**உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்**
**துறைபிறக்கு ஒழியப் போகிக் கறைஅடிக்** (பட: 346 - 351)

நீர்பாய்த்துறை பட்டினத்தில் அமைந்துள்ள துறைமுகத்தில் காணப்படுகின்ற திசைவிளக்கின் உயரம் வானம் விழாதபடி முட்டுக்காலாக ஊன்றி வைத்த ஒரு பற்றுக்கோள் போல விண்ணை முட்டும் வரை உயர்ந்துள்ளது என வர்ணிக்கப்படுகின்றது. பின்னர் இலங்கை இந்தியா நோக்கிப் பயணித்த காலனித்துவ வாதிகள் (போத்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள்) நமது கடல் வணிகத்தில் திசை அறிந்து கொள்ள தமது காலனித்துவத்திற்கு உட்பட்ட இடங்களில் எல்லாம் கலங்கரை விளக்கினை அமைத்தனர். ஆனால் தமிழ்ச் சமூகமோ இற்றைக்குப் பல்லாயிரம்

ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வாறு அடிப்படைக் கட்டுமான வசதியுடன் கூடிய வியாபாரத்தில் ஈடுபட்டனர். பண்டைத் தமிழனின் வியாபார நடவடிக்கையின் முக்கியமான அமைவிடமாக விளங்குகின்ற கடைத் தெருக்கள், கடைகள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக மதுரைக்காஞ்சி பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை போன்றவற்றில் மிக அழகான முறையில் கடைத்தெருக்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வேளை பண்டைத் தமிழனின் ஆளிடைக் காதலினை கூறும் அகநானூறு இவ் அரிய செய்தியைப்பதிவு செய்யத்தவறவில்லை.

**வாடா வேம்பின் வழுதி கூடல்**
**நாள் அங்காடி நாலும் நறுநுத்** (அகம் 93: 9-10)

இப்பாடல் வரியில் தலைவன் ஒருவன் தலைவியின் கூந்தலின் அழகினை பாண்டிய மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட மதுரையில் அமைந்த பகல் நேர கடைகளில் இருந்து வருகின்ற வாசனை உடன் ஒப்பிடுகின்றார். இவ்வாறு கூந்தலின் நறுமணத்தினை கடைத்தெருக்களிலிருந்து வருகின்ற சுகந்தத்துடன் ஒப்பிடுவதில் இருந்து கடைத் தெருக்கள் எவ்வாறு முறையான வழியில் அமைக்கப்பட்டிருந்தது என்பது தெரியவருகின்றது. மேலும் அகநானூ ற்றில் ஒரு பாடலில் தலைவன் வரவிற்காக காத்திருக்கும் தலைவி தோழிக்கு தலைவரின் சிறப்பினை விளம்பும் போது.

**விழவின் நாயினும் துஞ்சா ததாகும்**
**மல்வல் ஆவணம் மலுகுடன் மடியின்** (அகம்)

விழாக்கள் ஏதும் இல்லாதபோதும் வளமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற கடைத் தெருக்கள் போன்று தனது தலைவனும் இயங்கிக் கொண்டிருக்கின்றான் என்கிறாள். இச்செய்யுள் வரிகளில் இருந்து மதுரை வீதிகளில் அமைந்த கடைகள் ஓய்வின்றி செயல்படுவது புலப்படுகின்றது. மேலும் மதுரைக்காஞ்சியில் மதுரை நகரில் காணப்பட்ட அங்காடிகள், அல்லங்காடி, நாளங்காடி என்கின்ற இரு வகையான சந்தை கட்டமைப்புக்குள் விளக்கப்படுகின்றன. அல்லங்காடி என்பது சந்தைகளினை குறிக்கின்றது. இங்கு நாளங்காடி என்பது பகல் நேரக்கடைகள். அல்லங்காடி என்பது மாலை நேர அல்லது இரவு நேரக் கடைகள். சங்க இலக்கியங்களில் கடைகளினை நியமம், ஆவணம் என்றவாறாகவும் அழைத்தார்கள். பகல் நேர சந்தையில் உணவுப் பொருட்கள் அதிக அளவு விற்பனை செய்யப்படுவதுடன், இரவு நேரச் சந்தையில் புலால் உள்ளிட்ட

உணவுகள், உட்பட ஆபரணங்கள் அதாவது பொன் முத்துக்களினால் செய்யப்பட்ட ஆபரணங்களும் விற்பனை செய்யப்பட்டது. சந்தைகள் இரண்டாம் சாமம் வரையில் இயங்கியவையாக இருந்தன.

**பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇப்**
**பெருவரை மருங்கின் அருவியின் நுடங்கப்** (மதுரை 373- 374)

மேலும் அங்காடிவீதிகள் எப்போதும் ஓசையுடன் காணப்படும். அத்துடன் மேலும் அவற்றின் காட்சி அமைப்பு ஒரு ஓவியமாக இருக்கும். அங்காடிகளில் பல வண்ணக் கொடிகள் அசைந்து கொண்டும் இருந்தன. இக்கொடிகள் வணிகரது 'அறநெறிப்பிறழா' தொழில் தர்மத்தைப் பறைசாற்றுவதோடு, கடைத்தொகுதிகளில் விற்கப்படும் விற்பனைப்பண்டங்களின் தன்மைகளை விளக்கும் திசைகாட்டிகளாகவும் இவை அமைந்திருந்தன. இதனால் நுகர்வோன் அங்கும் இங்குமாய் அலையாது, தனக்குத் தேவையான அங்காடியை இலகுவில் இனம் கண்டுகொள்வான். காலவோட்டத்தில் இக் கொடிகள் அவர்களது விற்பனைப் பொருளின், விற்பனை நிலையத்தின் இலச்சினைகளாகவும் பரிணமித்தன. இத்தகைய ஓர் அணுகு முறையே இன்று பண்டக்குறி, பண்டப்பெயர் என அழைக்கப்படுகிறது. இதுவும் இன்றைய சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்துக்கு வித்திட்டது.

**6. நிறைவாக**

உலகில் தோன்றிய நாகரிகங்கள், அரசியல், சமூக, பொருளாதார வணிகக் கட்டமைப்புகள் மற்றும் சமூக வாழ்வியல் குறித்து ஆய்வுக்குட்படுத்தப்படுகின்ற போது இரு கருத்துக்கு இடமின்றி, விவாதிக்கப்பட வேண்டிய கருத்துருவாக தமிழர் தொன்மையும் பண்பாடும் விளங்குகின்றது. தமிழர் பண்பாடு என்பது தொடர்ச்சியான கற்றலின் வாயிலாகவும் செயல்பாட்டின் வழியாகவும் வரன்முறை, வரன்முறைவழியாக தமது முன்னோரிடமிருந்து பெற்றுக்கொண்டிருக்கும் தமிழர் வாழ்வியல் நடைமுறைகள், தமிழர் பண்பாட்டின் அடையாளங்கள் தமிழர் வாழ்வின் ஓர் அங்கமாக பிணைந்திருக்கும் ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் பண்பாடு என்கிற பதத்துள் உள் வாங்கிக்கொள்வர்.

சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் சிறப்பினை இயம்புகின்ற ஒன்றாகவோ,மேலும் பண்டைய மொழி வழக்கினை அறிந்துகொள்ள உதவும் கருவூலமாக மட்டுமாக நோக்காது தமிழர்களின் தொன்மையான பண்பாட்டின் அடிப்படை அம்சங்களினைப் புரிந்துகொள்ளும் வாழ்க்கை

நெறி, வாழ்வியல் சித்தாந்தங்கள், வரலாறு, அரசியல், பொருளாதார, சமூக, வணிகக் கட்டமைப்புக்கள் போன்றனவற்றினை புரிதலுக்கான அடிப்படையான மூலகங்களாகவும் காணப்படுகின்றன.

ஐவகை நிலப்பரப்பில் வாழ்ந்தவர்கள் நிலவமைப்புக்கு ஏற்றவாறு, வணிகம், கைவினை, விவசாயம், வேட்டையாடுதல் மீன்பிடித்தல் போன்ற துறைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சங்ககாலத்தில் விவசாயத்தினை முதன்மையாகக் கொண்ட ஓர் கிராமியப் பொருளாதாரம் காணப்பட்டது. ஆனால் பொருளாதார வளர்ச்சியானது எல்லாப் பிரதேசங்களிலும் ஒரு சீரமைக்கப்பட்டு இருந்திருக்கவில்லை. ஏனெனில் வளங்களின் வாய்ப்புக்கும், அதன் செழிப்புக்கும் ஏற்றவாறுதான் பொருளாதார முன்னேற்றங்கள் காணப்பட்டன. இவற்றைப் பரவலாக்கி பலரும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். மேலும் மனிதனுடைய அடிப்படைத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்குமாய் பொதுவான பரிமாற்று ஊடகம் ஒன்று அங்கு காணப்பட்ட போது பண்டமாற்றுப் பொருளாதாரம் தோன்றியது. ஐவகை நிலங்களில் வாழ்கின்ற (குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம்) மக்களுக்கு கிடைக்கின்ற வளங்களின் கிடைப்பனவுக்கு ஏற்ப உற்பத்திகளில் ஈடுபட்டனர். மக்கள் தமது தேவையினைப் பூர்த்தி செய்வதற்குப் பொருளாதார சார்பு நிலையுடன் கூடிய இணைதல் காணப்பட்டது. ஆனால் பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் உள்ள குறைபாடுகளான இரட்டை பொருந்துகையின்மை, பிரிபட முடியாத்தன்மை போன்ற குறைபாடுகளை ஆதித்தமிழனும் உணர்ந்தமையினால் அவ் முறைமையிலிருந்து விலக வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

நிலையான அரசின் தோற்றத்தின் பின்னர் நாணயங்கள், பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் செய்யப்பட்டன. மேலும் நாணயங்களினைப் பரிசோதிக்க வண்ணக்கர் என அழைக்கப்படும் அரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் இருந்தனர். பண்ட மாற்றுப் பொருளாதாரத்தின் அஸ்தமனமும் நாணய புழக்கத்தின் எழுச்சியும் உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தில் பாரிய அளவிலான தாக்கத்தினை ஏற்படுத்தியது. உள்நாட்டு வியாபாரத்தில் நாளங்காடி, அல்லங்காடி வணிக நிலையங்களின் செயற்பாடுகள் உருவாகின. பட்டினப்பாலை மதுரைகாஞ்சி அக்கால வணிகக் கட்டமைப்பினை வெளிக்காட்டும் சுவடிகள் போல் அமைந்து காணப்பட்டன. அன்று வணிகர்கள் அறவழி ஒழுகுபவர்களாக இருந்தார்கள். பட்டினப்பாலை வணிகரைப்பற்றி. உயர் குடிப்பிறந்த வணிகர், கொலை விலக்கி, களவுநீக்கி, தேவர் பேணி, ஆவுதி பெய்து,

ஆநிலை பகடு புறம் தள்ளி, நான்மறை அந்தணர் புகழ் பரப்பி, புண்ணியம் முட்டாக் குறியில்லா தண்ணென வாழ்கின்றனர்" (ப.பா. 199 - 210) எனக் குறிப்பிடுகின்றது. அக்கால வணிகரது ஒழுக்க மேம்பாடு, வள்ளுவர்வாக்கான "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பதற்கமைய அமைந்து கிடந்தது என்பது கோடிட்டு நோக்கப்படவேண்டியதாகிறது.

மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பெரும்பாண் ஆற்றுப்படை போன்ற நூல்களில் உள்நாட்டு வாணிபம் போல், கடல் கடந்த வர்த்தகமும் விபரிக்கபட்டுள்ளது. மேலும் சங்ககாலத்தில் ஓர் நிலைபேணுதலும் செழிப்பானதுமான பொருளாதாரத்துக்கு, கப்பல் வாணிபம் அதாவது கடல் கடந்த வர்த்தகம் உயிர்ப்பாயிருந்தது. பூம்புகார், முசிறி, கொற்றை, தொண்டி, சாலியூர், எயிற்றும்பட்டினம், மருங்கூர்பட்டினம் போன்றவை சங்ககாலத்திலிருந்து நடைமுறையில் காணப்பட்ட துறைமுகங்களாகும். இவற்றின் ஊடாக கிரேக்கம், உரோமம், பலஸ்தீனம் போன்றவற்றுடன் வர்த்தகத் தொடர்பினை தமிழர்கள் பேணிவந்தனர். இத்தகைய நாடுகளுடனான வணிகத் தொடர்பினை மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பெரும்பாண் ஆற்றுப்படை, புறநானூறு, அகநானூறு, போன்ற இலக்கியங்கள் சுட்டிக் காட்டுவதுடன். அண்மைக்காலம்வரை இப்பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற அகழ்லாராய்ச்சிகளும் வெளிப்படுத்துகின்றன.

அரசர்கள் மங்காப் புகழுடனும், குன்றாத செல்வத்துடனும் ஆட்சி புரிய வருமானம் வணிகர்களின் "உல்கு" என்று அழைக்கப்படும் அதாவது வணிகர்களிடமிருந்து அறவிடப்படும் வரியிலேயே தங்கியிருந்தது. மேலும் கழுதைகள் மேல் பொதிகளினை ஏற்றிச் செல்லும் "கழுதைசாத்து" என்று விழிக்கப்படும் வணிகக் கூட்டமாம், சுங்கம் வசூலிக்கபடும் நிலையங்களின் ஊடாக (உலகு உடைப்பெருவழி) சுங்கம் செலுத்தி பொருட்களினை ஏற்றிச் சென்று வணிகம் செய்தார்கள். மேலும் சுங்கம் செலுத்தியமைக்காக பொதிகளில் சோழனின் புலி இலச்சினையும் பொறிக்கப்பட்டது என்றும் பெரும் பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. மேலும் சங்க இலக்கியங்கள் வாயிலாகக் கண்டு கொண்டது என்னவெனில் சத்திரிய (அரச) வைசிய (வணிக) இனங்களுக்குமிடையே நெருக்கமான தொடர்புகள் காணப்பெற்றது. இதன் ஓர் அங்கமாகத் தான் அரசனும், அரசும் வணிகனின் பாதுகாவலனாகவும், அவ்வேளை வணிகர்கள் குடியானவர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் சேவகராகவும் காணப்பட்டனர், இன்றைய நவீன உலகிற் கூட

வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் வியாபாரிகளினால் முடிக்கு உரியவர்கள் போன்றே உபசரிக்கப்பட வேண்டும் என்ற மனப்பாங்கே இன்றும் காணப்படுகின்றது. அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் போட்டி உலகில் வியாபாரங்களின் நிலைபேண்தன்மை உறுதி செய்யப்படுகின்றது.

நாம் இன்று காணும் சில்லறை, மொத்த வியாபாரங்கள் எல்லாம் சங்ககாலத்திலேயே இருந்தன. எனினும் உலகமயமாக்கல், தொழில்நுட்ப வளர்ச்சி, மக்கள் தேவைகள், விருப்பங்களின் மாற்றங்கள், உற்பத்தியின் வடிவங்கள், தரங்களின் மாறுதல்கள் போன்றனவற்றின் விளைவாக வணிகமும், வணிகம் முறைகளும் தற்போது மாறுதலுக்கு உட்பட்டிருக்கின்றது.

தொகுத்துப்பார்க்கையில் உலகப்புகழ் பெற்ற கிரேக்க வணிகத்தையும், வணிக முறைமைகளையும் ஒத்த வணிகச் செயற்பாடுகள் சங்கத்தமிழர்களிடையே நிலைபெற்று, நிறைவுடன் காணப்பட்டிருந்தும், காலவோட்டத்தில் சங்கம்மருவிய பின்னைய காலத்தில், வட இந்தியாவிலிருந்து தென்தமிழ் நாட்டுக்குள் வந்து நுழைந்த பௌத்த சமண மதப்போக்குகள் அவற்றின் சிந்தனைகள், செயற்பாடுகள் மேலுமாய் பாரதத்தின் மீதாய் இடம்பெற்ற அந்நியப்படையெடுப்புக்கள், பண்டுதொட்டு அறவழிப்பட்டு மன்னுயிர் ஓம்பி சிறந்து வளர்ந்து வந்த தமிழர் வாணிபமும், வாணிப முறைகளில் எதிர்க்கணியத் தாக்கத்தினை உருவாக்கியது. எனினும் மேற்கத்தைய வாணிபத்தில், வாணிப முறைகளில் கிரேக்க மொழி வழக்கிழந்து, அவ்விடத்தை ஆங்கில மொழி ஆக்கிரமித்திருந்தும், மேலும் கிரேக்க நாகரீகம் சிதைந்தும் போனது போல், தமிழ் மொழி வழி வணிகமும், வணிக முறையும் சிதைவுறவில்லை இதுவே நிதர்சனமான உண்மையாகும். யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர் தர வாரா! "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்கின்ற உயிர்ப்பான கோட்பாடுகள் உள்ளவரை, தமிழ் வணிகத்தில் மட்டுமல்ல உலக வணிகச்செயற்பாடுகளிலும் தமிழ்ப் பனுவல்கள் வழி செய்திகள் ஊறல்களாகவேயிருந்து, உலக வணிகத்தை உயிர்ப்பிக்கிறவையாகவே இருக்கும். துலக்கத்துலக்க லோகங்கள் மிளிர்வது போல், தமிழ் மொழிப் பனுவல்கள் குறித்த வணிகம் சார் ஆய்வுகள் வளர வளர தமிழ் வணிகம் மிளிரும், உயிர்புறும் பண்பாட்டு ரீதியிலான வணிகக் கட்டமைப்புக்களும் வளரும்.

## உசாத்துணைகள் :-


இரகுநாதன், ம. (2009), பண்டைத்தமிழர் பண்பாட்டுத் தடங்கள், யாழ்ப்பாணம்.

Bhaskaran,G, (2010), The vital Power of culture amidst Globlization waves : Jaffna University of Jaffna.

நாகராசன்.வி. (2004), பத்துப்பாட்டு II மூலமும் உரையும் சென்னை : நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்

கிருஷ்ணராஜா, சோ. (2010), பண்பாடு : சமூக மெய்யியல் நோக்கு, கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

கிருஷ்ணராஜா. சோ.(2007) சங்ககால சமூகமும் சமய - மெய்யியற் சிந்தனைகளும். In சி. பத்மநாதன் (ed) சங்க இலக்கியமும் சமூகமும் - கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ப. 196 - 240.

பாலசுந்தரம், (2015), பண்டைய தமிழர் பண்பாடு ஓர் புதிய அணுகுமுறை, ரொரன்மரா : சுவாமி விபுலானந்தர் ஆய்வு மையம்.

தனிநாயகம் அழகன், (1980), தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் (செல்வநாயகம் நினைவு சொற்பொழிவுகள்) யாழ்ப்பாணம் : தந்தை செல்வா அறங்காவற்குழு.

தட்சிணாமூர்த்தி,அ, (2021) தமிழர் நாகரிகமும் பண்பாடும், சென்னை : ஐந்திணை பதிப்பகம்.

Keesing, F. M. (1965). Cultural anthropology. Mittal Publications.

Kottak, C. P. (2015). Cultural anthropology: Appreciating cultural diversity. McGraw-Hill Education.

அருணாச்சலம்.மு, (2009) தமிழ் இசை இலக்கிய வரலாறு. தஞ்சாவூர்: மங்கையர்க்கரசி பதிப்பகம்.

அறவாணன்.க.ப., (1994). தமிழ்ச் சமுதாய வரலாறு, காப்பியக் காலம், சிதம்பரம்.

சண்முகதாஸ். அ. (2007) சங்க இலக்கியத்தில் வைணவம் : In சி. பத்மநாதன் (ed) சங்க இலக்கியமும் சமூகமும் - கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ப. 94 - 114.

மோகன், இரா. (2004). பத்துப்பாட்டு I மூலமும் உரையும். சென்னை : நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்

சுப்பிரமணியன். ச.வே. (2006). சங்க இலக்கியம் (முழுவதும்) சென்னை : மணிவாசகர் வெளியீட்டகம்.

Rojek, C. (2007). Cultural studies. Polity.

Uyangoda. J (2015) Social Research Pholosophical and Methodogical Foundation. Colombo : Social Scientists' Association.

சிவேசன், சி. (2017). தமிழர் பண்பாட்டு மேம்படுத்தலில் நாவலர் வழியில் புத்தூர் மழவராயர் கந்தையாவின் பங்கும் பணியும் ஓர் மீள்பார்வை. யா/ ஸ்ரீ கல்லூரி சோமாங்கந்த கல்லூரி, சோமாஸ்கந்தன் கல்லூரி வருடாந்த சஞ்சிகை, புத்தூர், யா/ சோமாஸ்கந்தன் கல்லூரி.

சிவத்தம்பி, கா. (1985). தமிழ்த்தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும், யாழ்ப்பாணம் : ஈரோஜ் ஆவணக்காப்பக வெளியீடு.

சிவத்தம்பி, கா. (1994). தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும் சென்னை : நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் வெளியீடு.

சிவத்தம்பி, கா. (2000). யாழ்ப்பாணம் : சமூகம், பண்பாடு, கருத்துநிலை, கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி. கா. (2007) சங்க காலமும் இலக்கியமும் ஆய்வின் மாறும் பரிமாணங்கள் . In சி. பத்மநாதன் (ed) சங்க இலக்கியமும் சமூகமும் - கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ப. 1 - 32.

சிவலிங்கராஜா.சி. (2014). யாழ்ப்பாணப்பண்பாடு : மறைந்தவையும் மறைத்தவையும். கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

சிற்றம்பலம். க.(1993). யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு. திருநெல்வேலி : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

வித்தியானந்தன். சு. தமிழர் சால்பு. கண்டி

**சுருக்க விளக்கம்**

| | | |
|---|---|---|
| அகம் | - | அகநானூறு |
| ஐங் | - | ஐங்குறுநூறு |
| நற் | - | நற்றிணை |
| பட் | - | பட்டினப்பாலை |
| பெரும் | - | பெரும்பாண் ஆற்றுப்படை |
| மதுரை | - | மதுரைக்காஞ்சி |
| பதிற்று | - | பதிற்றுப்பத்து |
| பரி | - | பரிபாடல் |
| புறம் | - | புறநானூறு |



**Prof.Sivanandamoorthy Sivesan**
Professor in Marketing
Faculty of Management Studies and Commerce
University of Jaffna – Sri Lanka

Sivesan Sivanandamoorthy, a Professor in Marketing, is currently attached to the Department of Marketing, Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka, and also serves as a coordinator for Tourism and Hospitality Management Degree Programme. He obtained two different Australian scholarships: International Postgraduate Research scholarship (IPRS) and Federation University Australia Postgraduate Research scholarship ( FedUniPRS) to earn his Ph.D. on Tourism Governance from Federation University, Australia and holds a Masters of Commerce Degree from University of Kelaniya in 2012. He has published a number of papers in international refereed journals and also six books. Sivesan has supervised many Honours and Master Degree candidates to complete their dissertation as part of the degree programme. He is currently one of the editorial board members of reputable refereed journals and has been an ad hoc reviewer for several others. He has served in a variety of governance and administrative roles across a wide range of academic activity and wider service.

Print at Harikanan.